## சொல் இலக்கணம் ;

ஒரு எழுத்து தனித்து நின்றோ அல்லது பல எழுத்துக்கள் சேர்ந்து பொருள் தருமாயின் அது சொல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு;** ஆ, ஈ, பூ, மா, வா, ஆடு, ஈகை, பூண், மாடு, வான், ஆண்மை, ஈனம், பூண்டு, மானம், வாத்து.

## சொற்களின் வகைகள் ;

- இலக்கண வகை
- இலக்கிய வகை
  என இரண்டு வகைப்படும்.

| சொல் | |
|---|---|
| இலக்கண வகை | இலக்கிய வகை |
| 1. பெயர்ச்சொல் | 1. இயற்சொல் |
| 2. வினைச்சொல் | 2. திரிசொல் |
| 3. இடைச்சொல் | 3. திசைச்சொல் |
| 4. உரிச்சொல் | 4. வடசொல் |

**பெயர்ச்சொல்;**

இடுகுறியாகவோ, காரணம் கருதியோ, ஒன்றன் பெயராய் அமைந்த சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

**பெயர்ச்சொல்லின் வகைகள் ;**

| | | |
|---|---|---|
| 1. | பொருட்பெயர் | மனிதன், மரம், புத்தகம் |
| 2. | இடப்பெயர் | மதுரை, தஞ்சை |
| 3. | காலப்பெயர் | காலை, தை |
| 4. | சினை பெயர் | கை, இலை |
| 5. | பண்புப்பெயர் | வெண்மை, வட்டம் |
| 6. | தொழிற்பெயர் | காத்தல், வற்றல் |

**திணை**

| திணை | |
|---|---|
| **உயர்திணை** | **அஃறிணை** |
| எ.கா:<br>மனிதர்கள்<br>தேவர்கள் | எ.கா<br>மயில்<br>காளை<br>புழு வகைகள்<br>பூச்சி வகைகள்<br>மர மற்றும் செடி வகைகள் |

**பால் ;**

| | | |
|---|---|---|
| 1. | ஆண்பால் | எடுத்துக்காட்டு; இறைவன், அரசன், ஆசிரியர் |
| 2. | பெண்பால் | எடுத்துக்காட்டு; இறைவி, அரசி, ஆசிரியை |
| 3. | பலர்பால் | எடுத்துக்காட்டு; தேவர்கள், ஆடவர், மக்கள், பெண்டிர் |
| 4. | ஒன்றன்பால் | எடுத்துக்காட்டு; அது, புலி ,மரம், செடி |
| 5. | பலவின்பால் | எடுத்துக்காட்டு; அவை, கிளிகள், மயில்கள், சுவடிகள், புறக்கள் |

**எண்:**

| எண் | |
|---|---|
| ஒருமை<br>**எடுத்துக்காட்டு;**<br>நான், அவன், அது, குயில் ,கல் | பன்மை<br>**எடுத்துக்காட்டு;**<br>நாம், அவர்கள், அவை, குயில்கள், கற்கள் |

**இடம்**

| மூவிடம் | | |
|---|---|---|
| **தன்மை** | **படர்க்கை** | **முன்னிலை** |
| சொல்லுகின்றவன் பெரும் இடம்<br>**எ.கா ;**<br>நான், நாம் நாங்கள் | அயலனாகிய பேசப்படுகின்றவன் பெரும் இடம்<br>**எ.கா ;** அவன், அவள், அது, அவர்கள் | கேட்கின்றவன் பெரும் இடம்<br>**எ.கா ;**<br>நீ, நீங்கள், நீவிர் |

**பெயர்ச்சொல்**

**தொழிற்பெயர்:**

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும். இது எண், இடம், காலம், பால் ஆகியவற்றை காட்டாது.

**எடுத்துக்காட்டு:** உண்ணல், உரங்கள், கல்வி, கேள்வி

**தொழிற்பெயர் விகுதிகள்**

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆணை, மை, து, என்ற



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

19 விகுதிகளும் பிறவுமாம். வினைமுற்று சொற்களோடு மேற்கண்ட விகுதிகளை சேர்த்தால் தொழிற் பெயராகும்.

**எடுத்துக்காட்டு:**

- கூறுதல் = கூறு + தல்
- பாடல் = பாடு + அல்
- நாட்டம் = நாடு + அம்
- கொலை = கொல் + ஐ

**பண்பு பெயர் விகுதிகள்**
மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், அர், பம், து, என்பன பண்பு பெயர் விகுதிகளாகும்.

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| நன்மை = நல் + மை | நன்றி = நல் + றி |
| தொல்லை = தொல் + ஐ | நன்று = நல் + று |
| மாச்சி = மான் + சி | நலம் = நல் +அம் |
| மாண்பு = மான் + பு | நன்னார் = நல் + அர் |
| மழவு = மழ + உ | திட்பம் = திண் + பம் |
| நன்கு = நல் + கு | தீது = தீமை + து |

**பொருட்பெயரின் பண்புகள்**

வேற்றுமை உருபுகளைக் கொள்ளும். காலம் காட்டாது. திணை பால், பகுப்புகளைக் கொண்டது.
**பொருட்பெயரின் வகைகள்:**

உயர்திணைப் பொருட்பெயர்

அஃறிணைப் பொருட்பெயர்

**காலப்பெயர்**
காலப்பொதுப் பெயர்கள்

ஆண்டு, விநாடி, கிழமை, காலம் போன்றவை.

**சிறப்புக் காலப்பெயர்கள்**
தை,மாசி, திங்கள், செவ்வாய், இளவேனில், முதுவேனில் போன்றவை.

**முதனிலைத்தொழிற்பெயர்:**

விகுதிகள் இல்லாமல் பகுதி மட்டுமே வந்து தொழில் ஆற்றுவதற்கு முதல்நிலை தொழிற்பெயர் என்று பெயராகும்.

**எடுத்துக்காட்டு ;** அவன் அடிபட்டான், மக்கள் இடிபட்டனர்.

மேற்கண்ட தொடர்களில் **தல்** விதி பெறாமல் அடி, இடி என பகுதிகள் மட்டும் வந்து தொழிலை ஆற்றுகின்றன.

**முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்**

பகுதிகள் மட்டும் அமைந்த முதனிலைத் தொழிற்பெயர்கள் சில இடங்களில் திரிந்துவிடும். அவ்வாறு திரிந்து வரும் முதனிலைத் தொழிற்பெயர், முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு ;** கெடு – கேடு ; பெரு – பேரு ;

**எதிர்மறை தொழிற்பெயர்**

எதிர்மறை பொருளில் வருவது எதிர்மறை தொழிற்பெயர் ஆகும்.

**எடுத்துக்காட்டு ;** நடவாமை, கொள்ளாமை

**விகுதி பெற்ற தொழிற்பெயர்**

வினையடியுடன் விகுதி சேருவதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயராகும்.

**எடுத்துக்காட்டு:**

| வினையடி | விகுதி | தொழிற்பெயர் |
|---|---|---|
| நட | தல் | நடத்தல் |
| வால் | கை | வாழ்க்கை |
| ஆள் | அல் | ஆளல் |

ஒரே வினையடி பல விகுதிகளையும் ஏற்கும்

**எடுத்துக்காட்டு ;** நடை , நடத்தை, நடத்தல் (நட என்பது = வினையடி)

**வினையாலணையும் பெயர்**

வினைமுற்று வினையை குறிக்காமல் வினை செய்தவரை குறித்தால் அது வினையாலணையும் பெயர் எனப்படும். வினைக்குரிய காலத்தையும் பேருக்குரிய வேற்றுமை உருவங்களையும் பெற்று வரும்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

ஐ–என்ற இரண்டாம் வேற்றுமை உருபு அமைந்துள்ளது.

- அகழ்ந்தாரை இறந்த காலம்
- அகழ்கின்றாரே நிகழ்காலம்
- அகழ்வாரை எதிர்காலம்

**தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள்**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| • தொழிலுக்கு பெயராய் வரும். | • தொழில் செய்பவருக்கு பெயராய் வரும். |
| • படர்க்கை இடத்தில் வரும். | • மூவிடங்களிலும் வரும். |
| • காலம் காட்டாது. | • முக்காலங்களையும் காட்டும். |

**ஆகுபெயர்**

ஒரு பொருளின் இயற்பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்கு பெயராகி வருவது ஆகுபெயர் ஆகும்.

**எடுத்துக்காட்டு**

**ஊர் சிரித்தது**

இதில் ஊர் என்ற சொல் ஊரைக் குறிக்காமல் அதோடு தொடர்புடைய ஊர் மக்களை குறிப்பதால் இக்கு ஆகுபெயர் ஆகும்.

| ஆகு பெயரின் வகைகள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|
| 1. பொருளாகு பெயர் | தாமரை மலர்ந்தது. தாமரை என்பது வேர், கொடி, இலை, பூ அனைத்தும் சேர்ந்த முழு பெயர். ஆனால் இங்கு பூவை மட்டும் குறிக்கிறது. |
| 2. இடவாகு பெயர் | காஞ்சி வென்றது. (காஞ்சியை ஆண்ட மன்னனை குறிக்கின்றது.) |
| 3. காலவாகு பெயர் | அவள் டிசம்பர் சூடினாள். (டிசம்பர் என்கிற ஒருவகை மலரை குறிக்கின்றது.) |
| 4. சினையாகு பெயர் | தலைக்கு ஒரு பழம் கொடு. (தலை என்பது இங்கு ஒரு மனிதனை குறிக்கின்றது) |
| 5. பண்பாகு பெயர் | வெள்ளையை ஏரில் பூட்டு. (இங்கு வெள்ளை என்பது வெள்ளை நிறம் கொண்ட காளையை குறிக்கின்றது.) |
| 6. தொழிலாகு பெயர் | வளவன் வற்றல் உண்டான்.(வற்றல் என்பது தொழிலின் பெயர். வற்றுதலை உடைய உணவுக்கு பெயராகி வந்தது.) |
| 7. எண்ணலளவை ஆகுபெயர் | நாளும் இரண்டும் சொல்லுக்கு உறுதி. (இங்கு நாளும் இரண்டும் என்பது முறையே நாலடியாரையும் திருக்குறளையும் குறிக்கின்றது.) |
| 8. எடுத்தலளவை ஆகுபெயர் (எடுத்தல் நிறுத்தல்) | இரண்டு கிலோ கொடு. (இரண்டு கிலோ என்பது அந்த அளவை கொண்ட பொருட்களை குறிக்கின்றது.) |
| 9. முகத்தலளவை ஆகுபெயர் | மூன்று லிட்டர் கொடு. (மூன்று என்பது அந்த அளவு உள்ள பால் எண்னை போன்ற பொருட்களை குறிக்கின்றது.) |
| 10. நீட்டலளவை ஆகுபெயர் | நான்கு மீட்டர் எடு. (இங்கு நான்கு மீட்டர் என்பது அவ்வளவு உள்ள துணி, கயிறு போன்றவற்றை குறிக்கின்றது.) |
| 11. சொல்லாகு பெயர் | வள்ளுவன் சொல் வாழ்க்கைக்கு பயனுள்ளது. (இங்கு சொல் என்பது கருத்தினை குறிக்கின்றது.) |
| 12. தானியாகு பெயர் | ஏரி உடைந்தது. (ஏரி என்பது கரையை குறிக்கின்றது.) |
| 13. கருவியாகு பெயர் | தொலைக்காட்சி பார்த்து மகிழ்ந்தனர். (தொலைக்காட்சி என்பது அதில் வரும் நிகழ்ச்சிகளை குறிக்கின்றது.) |
| 14. கருத்தாவாகு பெயர் | திருவள்ளுவரை படித்துப் பார், ஷேக்ஸ்பியரை தொட்டுப்பார்,( இங்கு ஆசிரியர்கள் பெயர் அவர்கள் எழுதிய நூல்களை குறிக்கின்றது.) |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| 15. உவமையாகு பெயர் | துரியோதனன் வருகின்றான், (இங்கு துரியோதனன் என்பது அவனைப் போன்ற குணமுடைய மனிதனைக் குறிக்கின்றது.) களிறெறிந்து பெயர்கள் காளைக்கு கடனே, காளை என்பது வீரமுடைய இளைஞனை குறிக்கின்றது.) |
| 16. காரியவாகு பெயர் | நான் கற்றேன். அலங்காரம் என்பது அக் காரியத்தை குறிக்காமல் நூலை (அணியிலக்கண நூல்) குறிக்கிறது. |

**இடவாகு பெயருக்கும், தானியாக பெயருக்கும் உள்ள வேறுபாடு**

| இடவாகு பெயர் | தானியாகு பெயர் |
|---|---|
| • ஊர் சிரித்தது<br>• இடத்தை குறிப்பிடும் பொழுது அவ்விடத்தில் உள்ள பொருளை சுட்டுகின்றது<br>• இடம் பொருள் | • ஏரியுடைந்தது<br>• பொருளைக் குறிப்பிடும் பொழுது பொருள் உள்ள இடத்தை குறிக்கின்றது<br>• பொருள் இடம் |

**வினைச்சொல்:**

ஒரு பொருளின் தொழில் நிகழ்ச்சியை காட்ட வரும் சொல்லுக்கு வினைச்சொல் என்ற பெயர். இது செயலையும் காலத்தையும் காட்டும் வேற்றுமை உருவினை ஏற்காது.

**வினைச்சொல்**

1. வினை முற்று
2. பெயரெச்சம்
3. வினை யெச்சம்

**வினைமுற்று**

பெயர் சொல்லுக்கு துணையாக நின்று வாக்கியத்தின் பொருளை முடித்துக் காட்ட வருவது வினைமுற்று ஆகும். மரம் வீழ்ந்தது, பாண்டியன் படையெடுத்தான், மாடுகள் சென்றன. இத்தொடர்களில் வீழ்ந்தது, தான், சென்றன ஆகிய சொற்கள் வினைமுற்று ஆகும்.

**தெரிநிலை வினைமுற்று**

திணை, பால், காலம், போன்றவற்றை வெளிப்படையாக காட்டி சொல் முடிவது தெரிநிலை வினைமுற்று ஆகும். இது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றை வெளிப்படுத்தும்.

**எடுத்துக்காட்டு ;** ஓவியன் சித்திரம் தீட்டினான்.

- செய்பவன் – ஓவியன்
- நிலம் – சுவர் அல்லது திரைசீலை
- செய்பொருள் – சித்திரம்
- திணை – உயர்திணை,
- கருவி - தூரிகை வண்ணம்
- செயல் – தீட்டினான்
- காலம் – இறந்த காலம்
- பால் - ஆண்பால்

**குறிப்பு வினைமுற்று :**

திணை பால் போன்றவற்றை வெளிப்படையாக காட்டி காலத்தை மட்டும் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினைமுற்று வினைமுற்று ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

அவன் நல்லன், அவன் இன்சொல்லன்

இது பொருள் முதல் ஆறனையும் அடிப்படையாகக் கொண்டு, செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பதாகக் காட்டும்.

**எடுத்துக்காட்டு**

1. அவன் பொன்னன் – உண்மை உடையவன்– பொருள்
2. அவன் விழுப்புரத்தான்– விழுப்புரத்தில் வாழ்பவன்– இடம்
3. அவன் சித்திரையான்– சித்திரையில் பிறந்தவன் - காலம்

4. அவன் கண்ணன்– கண்களை உடையவன்– சினை
5. அவன் நல்லன்– நல்ல இயல்புகளை உடையவன்– குணம்
6. அவன் உழவன்– உழுதலை செய்பவன்– தொழில்

அவன் என்னும் எழுவாய்க்கும் பயனிலையாய் வந்த பொன்னன் என்பதே குறிப்பு வினையாகும். பொன்னை உடையவனாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் என பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

பொருள்முதல் ஆறினும்

தோற்றிமுன் ஆறனுல்

வினைமுதல் மாத்திரை

விளக்கல் வினை குறிப்பே – **நன்னூல்,321**

**வியங்கோள் வினைமுற்று**

க, இய, இயர் என்ற விகுதிகளில் ஒன்றைப் பெற்று வரும். வாழ்த்துதல் வைதல், விதித்தல் வேண்டல் என்ற நான்கு பொருளில் வரும்.

**எடுத்துக்காட்டு :**

வாழ்க , வாழிய, வாழியர்

| | |
|---|---|
| வாழ்க – வாழ்த்துதல்<br>வருக – விதித்தல் | ஒழிக – வைதல்<br>தருக – வேண்டல் |

**ஏவல் வினைமுற்று**

முன்னிலையில் உள்ள ஒருவனை, ஒருத்தியை அல்லது ஒன்றனை ஆணையிட்டு ஏவும் வினைக்கு ஏவல் வினைமுற்று என்று பெயர்.

**எடுத்துக்காட்டு ;** நீ படி, நீர் வாரீர்.

**முக்காலத்திற்கும் பொருந்தும் வினைமுற்று**

முக்காலத்திற்கும் இருக்கும் ஒரு பொருளை விளக்கும்போது, அத்தொடரின் விடைமுற்று, செய்யும் என்னும் வாய்ப்பாட்டில் அமைதல் வேண்டும் என்று வினையியலில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**முன்னிலை காலமும் தோன்றும் இயற்கை**

**எம்முறை சொல்லு நிகழும் காலத்து**

**மெய்ந்நிலை பொதுச்சொல் கீரைத்தல் வேண்டும்**

**எடுத்துக்காட்டு ;**

நீர், குளிரும், மலை நிற்கும்

ஞாயிறு தோன்றும், ஐப்பசி மாதத்தில் அடை மழை பெய்யும். நூலகம் காலை 9 மணிக்கு திறக்கும்.

**வினை வகைகள்**

செய்வினை, செயப்பாட்டுவினை

ஒரு வினையை ஒருவன் முன் நின்று செய்வது செய்வினை எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

ஒரு வினை, ஒருவனால் செய்யப்படுவதற்கு செயப்பாட்டு வினை என்று பெயர்.

**எடுத்துக்காட்டு ;**

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது.

**வேறுபாடுகள்**

| **ஏவல் வினைமுற்று** | **வியங்கோள் வினைமுற்று** |
|---|---|
| • முன்னிலையில் வரும்<br>• ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு.<br>(எழுது– ஒருமை)<br>(எழுது மீன்– பன்மை)<br>• கட்டளை பொருளை மட்டும் உணர்த்தும்.<br>• விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | • இருதிணை ஐம்பால் உவிடங்களுக்கும் பொதுவாய் வரும் (விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று தன்மை இடத்தில் வராது).<br>• ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.<br>• வாழ்த்துதல், வைதல், |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| | விதித்தல் வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும்.<br>• விகுதி பெற்றே வரும். |

**தன்வினை மற்றும் பிறவினை ;**

- கருத்தா தானே செய்யும் வினை தன்வினை எனப்படும்.
- கருத்தா பிறரைக்கொண்டு செய்விக்கும் வினை பிறவினை எனப்படும்.

1. தன் வினைப் பகுதியுடன் வி அல்லது பி என்ற எழுத்தை சேர்த்தால் அது பிறவினை பகுதியாகி விடும்.
2. கு, சு, டு, து, பு, று, என்னும் வல்லினம் உகரங்களை சேர்த்தால் அது பிறவினை பகுதியாகி விடும்.
3. தன்வினைப் பகுதியில் உள்ள மெல்லினத்தை வல்லினமாக மாற்றினால் பிறவினை ஆகும்.

**எடுத்துக்காட்டு ;**

| | |
|---|---|
| ராமு செய்தான் | தன்வினை |
| ராமு செய்வித்தான் | பிறவினை |
| பாலன் கண்டான் | தன்வினை |
| பாலன் காண்பித்தான் | பிறவினை |
| போனான் | தன்வினை |
| போக்கினான் | பிறவினை |
| வருந்தினான் | தன்வினை |
| வருத்தினான் | பிறவினை |

**உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை**

ஒரு தொழில் நிகழ்வதை அறிவிப்பது உடன்பாட்டு வினை ஆகும். தொழில் நிகழாமையும், தொழிலை மறுப்பதையும் உணர்த்துவது எதிர்மறை வினையாகும்.

**எடுத்துக்காட்டு**

உடன்பாட்டு வினை – கண்டான்

எதிர்மறை வினை – காணான்.

**தொடர் வகைகள்**

தொடர்கள் பொருள் அடிப்படையில் நான்கு வகைப்படும்.

**செய்தி தொடர்**

ஒரு செய்தியைத் தெளிவாகக் கூறும் தொடர் செய்தித் தொடராகும்.

**எடுத்துக்காட்டு**

கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.

**வினாத்தொடர்**

ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமையும் தொடர் வினாத் தொடர் ஆகும்.

**எடுத்துக்காட்டு**

சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார் ?

**விழைவுத்தொடர்**

ஏவுதல், வேண்டுதல், வாழ்த்துதல், வைதல் ஆகிய நான்கு பொருட்களில் வரும் தொடர் விழைவுத்தொடர் ஆகும்.

**எடுத்துக்காட்டு**

இளமையில் கல். (ஏவல்)

உன் திருக்குறள் நூலைத் தருக. (வேண்டுதல்)

உழவுத் தொழில் வாழ்க. (வாழ்த்துதல்)

கல்லாமை ஒழிக. (வைதல்)

**உணர்ச்சித்தொடர்**

உவகை, அழுகை, அவலம், அச்சம், வியப்பு முதலான உணர்ச்சிகளை உணர்த்தும் தொடர் உணர்ச்சி தொடர் ஆகும்.

**எடுத்துக்காட்டு**

அடடா! என் தங்கை பரிசு பெற்றாள். (உவகை)

ஆ ! புலி வருகிறது (அச்சம்)

பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்து விட்டனவே ! (அவலம்)

ஆ மலையின் உயரம் தான் என்னே ! (வியப்பு)



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**தொடரமைப்புகள்**

**தனிநிலைத் தொடர்**

கண்மணி நாளிதழ் படிக்கிறாள்

(ஓர் எழுவாய், ஒரு பயனிலை)

கண்மணி நாளிதழையும், வளவன் வார இதழையும்,

முருகன் மாத இதழையும் படிக்கின்றனர்.

(பல எழுவாய்கள் ஒரே பயனிலை)

**தொடர்நிலைத் தொடர்**

நான் நன்றாகப் பொருள் உணர்ந்து படித்தேன்; அதனால் தேர்வில் முதலிடம் பெற்றேன் (ஒரே எழுவாய், பல பயனிலைகள்)

ஒன்றுக்கும் மேற்பட்ட தொடர்களில் அதனால், ஆகையால், ஏனெனில்,

ஏனென்றால் முதலான இணைப்புச் சொற்கள் இணைக்கப்பட்டு பல பயனிலைகளைக் கொண்டு முடியும்.

**கலவைத் தொடர்**

தமிழில் பிழையின்றி எழுத வேண்டும் எனில், நல்ல தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும். இத்தொடரில் நல்ல தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும் என்பது முதன்மைத் தொடர், தமிழில் பிழையின்றி எழுத வேண்டும் என்பது, சார்பு தொடர் இவ்வாறு இதில் பல தொடர்கள் கலந்து வரும்.

**தொடர் இலக்கணம்**

**எழுவாய்**

ஒரு சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாய் அமைந்த பெயர்ச்சொல்லே எழுவாய் ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

கண்ணன் வந்தான்

கண்ணன்– எழுவாய்

**பயனிலை**

ஒரு சொற்றொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடம் பயனிலை ஆகும்.

**எடுத்துக்காட்டு**

| | பெயர் | எண் அளவு |
|---|---|---|
| 1. | முந்திரி | 1 /320 |
| 2. | அரைக்காணி | 1 /160 |
| 3. | அரைக்காணி முந்திரி | 3/320 |
| 4. | காணி | 1 /80 |
| 5. | கால் வீசம் | 1 /64 |
| 6. | அரை மா | 1 /40 |
| 7. | அரை வீசம் | 1 /32 |
| 8. | முக்காணி | 3 / 80 |
| 9. | முக்கால் வீசம் | 3/ 64 |
| 10. | ஒருமா | 1 / 20 |
| 11. | மாகாணி (வீசம்) | 1 /16 |
| 12. | இருமா | 1 / 10 |
| 13. | அரைக்கால் | 1 /8 |
| 14. | மூன்றுமா | 3 / 20 |
| 15. | மூன்று வீசம் | 3/16 |
| 16. | நாலுமா | 1 /5 |

மல்லிகை பூத்தது – பூத்தது என்ற வினை சொல்லே இங்கு பயனிலை ஆகும்.

**செயப்படுபொருள்**

எழுவாய் ஒரு வினையை செய்ய அதற்கு அடிப்படையாய் அமைந்த பொருளே செய்யப்படும் பொருளாகும்.

**எடுத்துக்காட்டு**

நீலா மல்லிகையை சூடினாள்

நீலா – **எழுவாய்**

சூடினாள்– **பயனிலை**

மல்லிகை– **செயப்படுப்பொருள்**

ஒரு தொடரில் எழுவாயும், செய்யப்பட பொருளும், பெயர் சொல்லாகவும், பயனிலை வினைமுற்று ஆகவும், இருக்கும். பயனிலை அந்தத் தொடரின் பயன் நிலைத்து நிற்கும் இடமாகும். ஒரு தொடரில் செயப்படுப் பொருள் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. செயப்படு பொருள் தோன்றும் தொடரானது விளக்கமாக இருக்கும்.

**தோன்றா எழுவாய்**

எழுவாய் தெரியவில்லை எனில் அது தோன்றாய் எழுவாய் எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

படித்தாய்– இதில் நீ என்னும் எழுவாய் வெளிப்படையாக தெரியவில்லை.

- மன்னன் வந்தான் –எழுவாய் தொடர்
- வந்தான் மன்னன் –வினைமுற்று தொடர்
- அண்ணனோடு வருவான் –வேற்றுமை தொடர்
- நண்பா கேள் – விழித்தொடர்
- உண்ண சென்றான் – தெரிநிலை வினையெச்ச தொடர்
- நன்கு பேசினான் – குறிப்பு வினையெச்சத் தொடர் (வினையடைத்தொடர்)
- பாடும் குயில் –தெரிநிலை பெயரெச்ச தொடர்
- இனிய காட்சி – குறிப்பு பெயரெச்சத் தொடர் (பெயரிடைத் தொடர்)
- வா வா வா – அடுக்குத்தொடர்.

**திருக்குறளில் தொடர் அமைப்பு கூறுகள்**

**தோன்றா எழுவாய்**

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி

மாசறு காட்சி யவர்க்கு

எது இன்பம் பயக்கும்? இன்று வினாவிற்கு மாசறு காட்சியவர்க்கு என்பது விடையாகும். அக்காட்சி இன்பம் பயக்கும். இங்கு காட்சி என்பது தோன்றா எழுவாய் ஆகும்.

**தோன்றாச் செயப்படு பொருள்**

சென்ற இடத்தால் செலவிடா தீதொரி இ நன்றின்பால் உய்ப்பது அறிவு.
எதை உய்ப்பது அறிவு? என்ற வினாவிற்கு மனத்தை உய்ப்பது அறிவு என்பது விடையாகும். இங்கு மனம் என்பது தோன்றா செய்யப்படும் பொருளாகும்.

**தோன்றாப் பயனிலை**

கெடுப்பதூஉம் கெட்டார்க்கு சார்வாய் மாற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை.

கெடுக்க வல்லது மழை, காக்க வல்லதும் மழை ,இங்கு வல்லது என்பது தோன்றா பயனிலை. நாம் தான் அச்சொல்லை வருவித்து கொள்ளல் வேண்டும்.

**வினைப் பயனிலை**

வினைமுற்று பயனிலையாக வந்தால் அது வினைப் பயனிலை எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

நான் வந்தேன்.

**பெயர்ப்பயனிலை**

பெயர்ச்சொல் பயனிலையாக அமைந்தால் அது பெயர் பயனிலை எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

சொன்னவள் கலா

**வினாப்பயனிலை**

வினாச் சொல் பயனிலையாக வந்தால் அது வினாப் பயனிலை எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

விளையாடுபவன் யார்?

**பெயரடை**

எழுவாயாக வரும் சொல்லுக்கு முன்போ, பின்போ அடைமொழி வந்தால் அது பெயரடை எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

அன்பரசன் – நல்ல பையன்

நல்ல என்பது – பெயரிடை

**வினையடை**

வினைப் பயனிலைக்கு முன்போ, பின்போ அடைமொழி வந்தால் அது வினையடை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

மகிழ்நன் மெல்ல வந்தான் – மெல்ல –

வினையடை



www.tnpscgroup4.in

**தன்வினை**

வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| நடந்தான் | நடத்து |
| அடங்கு | அடக்கு |
| திருந்தினான் | திருத்தினான் |
| ஆடினான் | ஆட்டினான் |
| மாறுவாள் | மாற்றுவாள் |
| செய்தான் | செய்வித்தான் |
| வந்தான் | வருவித்தான் |

**பிறவினை**

வினையின் பயன் எழுவாயை அன்றி பிறிதொன்றைச் சேருமாயின் அது பிறவினை எனப்படும்.

**வாக்கிய தொடர்கள்**

1. அப்துல் நேற்று வந்தான்–தன்வினை தொடர்
2. அப்துல் நேற்று வரவழைத்தான்–பிறவினை தொடர்
3. கவிதா உரை படித்தால் –செய்வினைத் தொடர்
4. உரை கவிதாவால் படிக்கப்பட்டது –செய்ய பாட்டு வினை தொடர்
5. குமரன் மலையில் நனைந்தான் – உடன்பாட்டு வினை தொடர்
6. குமரன் மலையில் நனையவில்லை – எதிர்மறை வினைத்தொடர்
7. என் அண்ணன் நாளை வருவான் செய்தித் தொடர்
8. எவ்வளவு உயரமான மரம் – உணர்ச்சித் தொடர்
9. பேசிக் கொண்டிருப்பவர் யார்– வினாத்தொடர்
10. பூக்களை பறிக்காதே – கட்டளைத் தொடர்
11. இது நாற்காலி, அவன் மாணவன் –பெயர் பயனிலைத் தொடர்

**நேர்கூற்று அயர் கூற்று**

**நேர்கூற்று**

- ஒருவர் பேசுவதை அவர் பேசியபடி கூறுவது நேர்கூற்று தொடராகும்.
- இதில் மேற்கோள் குறிகள் இடம் பெறும்.
- தன்மை ,முன்னிலை, பெயர்கள் இடம் பெறும்.
- இங்கு, இப்போது, இவை, என்ற சுட்டுப் பெயர்களும், நேற்று, இன்று, நாளை என்ற கால பெயர்களும் வரும்.

**எடுத்துக்காட்டு**

- அரசன் மந்திரியிடம், நான் நாளை வேட்டைக்கு செல்வேன் என்றார்.
- ஆசிரியர் மாணவர்களிடம் சரியான முறையில் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**அயற் கூற்று**

ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவது போல் அமைப்பது அயற்கூற்று தொடராகும்.

- அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா.
- இக்கூட்டில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கை பெயர்களாக மாறும்.
- சுட்டுப் பெயர்கள் அது, அவை, அங்கே, என மாறும்.
- கால பெயர்கள் அந்நாள், மறுநாள், என மாறும்.
- என்று என்னும் இணைப்பு சொல்லும் இடம் பெறும்.

**எடுத்துக்காட்டு**

- அரசன் மந்திரியிடம் தான் மறுநாள் வேட்டைக்கு செல்வதாக கூறினார்.
- ஆசிரியர் மாணவர்களிடம் சரியான முறையில் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறினார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

நேர்க்கூற்றில் வினா வாக்கியம், கட்டளை வாக்கியம், வியப்பு வாக்கியம், போன்றவை வந்து அவை அயற்கூற்றாய் மாறும்பொழுது அதற்கு ஏற்றபடி வாக்கியங்கள் மாறும்.

**எடுத்துக்காட்டு**

**நேர் கூற்று**

நான் நாளை வருவேன் என்று ஆசிரியர் கூறினார் – செய்தி வாக்கியம்

**அயர் கூற்று** – தான் மறுநாள் வருவதாய் ஆசிரியர் கூறினார்.

**நேர் கூற்று**

நாள்தோறும் காலையில் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என மருத்துவர் கூறினார். (கட்டளை வாக்கியம்)

**அயற் கூற்று**

நாள்தோறும் காலையில் உடற்பயிற்சி செய்ய வேண்டும், என மருத்துவர் அறிவுறுத்தினார்.

**நேர் கூற்று**

ஆகா ! கதிரவன் தோன்றும் காட்சி எவ்வளவு அழகாக உள்ளது என்றாள் மாலதி.

**அயர் கூற்று**

கதிரவன் தோன்றும் காட்சி மிக அழகாக

உள்ளது என்று மாலதி வியப்புற்றாள்.

**நேர்க்கூற்று**

மனப்பாட பாடலை ஒப்புவி என்றார் ஆசிரியர்–

கட்டளை வாக்கியம்

**அயற் கூற்று**

மனப்பாடப் பாடலை ஒப்புவிக்குமாறு ஆசிரியர்

கட்டளையிட்டார்.

**நேர் கூற்று**

நாளை நான் வரலாமா ? என்றான் ரகு. –வினா

வாக்கியம்

**அயற் கூற்று**

மறுநாள் தான் வரலாமா ? என கேட்டான் ரகு.

| நேர்கூற்று | அயற் கூற்று |
|---|---|
| நான் | தான் |
| நாம் | தாம் |
| நீ | அவன் (அ) அவள் |
| நீங்கள் | அவர்கள் |
| எங்கள் | தங்கள் |
| நாங்கள் | தாங்கள் |
| என்னை | தன்னை |
| இன்று | அன்று |
| நாளை | மறுநாள் |
| நேற்று | முன்தினம் |
| இங்கு | அங்கு |
| இப்பொழுது | அப்பொழுது |
| இது | அது |
| இவை | அவை |

**துணைவினைகள்**

**தனி வினை**

தனி வினை அடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் தனி வினை எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

படி, படியுங்கள்

படி என்னும் வினையடி பகாப்பதம் ஆகும். இவ்வாறு பகாபதத்தை கொண்டு தனி வினை அமையும்.

**கூட்டுவினை**

பகுபதமாக உள்ள வினையடிகளை கூட்டு வினையடிகள் என்பர். கூட்டு வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் கூட்டு வினை எனப்படும்.

எடுத்துக்காட்டு

ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள், முன்னேறினோம்

**கூட்டு வினைகளின் வகைகள்**

**1. பெயர் + வினை = வினை**

- தந்தி + அடி = தந்தியடி
- ஆனை + இடை = ஆணையிடு
- கேள்வி + படு = கேள்வி படு

**2. வினை + வினை = வினை**

- கண்டு+ பிடி = கண்டுபிடி
- சுட்டி + காட்டு = சுட்டிக்காட்டு
- சொல்லி + கொடு = சொல்லிக் கொடு

**3. இடை + வினை =வினை**

- முன்+ ஏறு = முன்னேறு
- பின் + பற்று = பின்பற்று
- கீழ் + இறங்கு = கீழ இறங்கு.

| வினையடி | முதல் வினை | துணைவினை |
|---|---|---|
| காட்டு | தாய் குழந்தைக்கு நிலவை காட்டினாள். | ஆசிரியர் செய்யுளைப் பாடி காட்டினார். |
| | சான்றோர் காட்டிய பாதையில் செல். | படித்த படி நடந்து காட்ட வேண்டும். |
| கொள் | பானை நான்கு படி அரிசி கொள்ளும். | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான். |
| | நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை. | நோயாளியை பார்த்துக் கொள்கிறேன். |

| தாவர இலை பெயர்கள் | | |
|---|---|---|
| 1. | ஆல், அரசு, மா, பலா, வாழை | இலை |
| 2. | அகத்தி, பசலை, முருங்கை | கீரை |
| 3. | அருகு, கோரை | புல் |
| 4. | நெல், வரகு | தாள் |
| 5. | மல்லி | தழை |
| 6. | சப்பாத்திக்கள்ளி, தாழை | மடல் |
| 7. | கரும்பு, நாணல் | தோகை |
| 8. | பனை, தென்னை | ஓலை |
| 9. | கமுகு | கூந்தல் |

**இடைச்சொல்**

பெயரையும் வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன இடைச்சொற்கள் ஆகும். இவை தனித்து இயங்கா.

**இடைச்சொற்களின் வகைகள்**

| | | |
|---|---|---|
| 1. | ஐ, ஆல், கு, இன், அது, கண் | வேற்றுமை உருபுகள். |
| 2. | கள், மார் | பன்மை விகுதிகள். |
| 3. | ஏன், ஓம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர்(கள்), அது, அ | திணை, பால் விகுதிகள். |
| 4. | கிறு, கின்று… | கால இடைநிலைகள் |
| 5. | அ, உ, இ, மல் | பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள். |
| 6. | ஆ, அல், இல் | எதிர்மறை இடைநிலைகள். |
| 7. | தல், அம், மை | தொழிற்பெயர் விகுதிகள். |
| 8. | க, இய | வியங்கோள் விகுதிகள். |
| 9. | அத்து, அற்று, அம் | சாரியைகள் |
| 10. | போல, விட, காட்டிலும், மாதிரி | உவம உருபுகள். |

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| 11. உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஒ, ஆகவே, ஆயினும், எனினும் | இணைப்பிடைச் சொற்கள். |
| 12. உம், ஒ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் | தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள். |
| 13. மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை | சொல்லுருபுகள். |
| 14. ஆ,ஒ | வினா உருபுகள் |

- இவற்றுள் உம், ஒ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச் சொற்கள் தற்காலத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- உம் - 'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

**எடுத்துக்காட்டு**

- மழை பெய்**தும்** புழுக்**கம்** குறையவில்லை( எதிர்மறை உம்மை)
- பாடர்க**ளும்** போற்றும் பாடகர்( உயர்வு சிறப்பு உம்மை)
- ஒ - ஒகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, (உயர்வு, இழிவு,) எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டு பொருள்களில் வரும்.
- தற்காலத்தில் ஒகார இடைச்சொல் பிரிநிலைப்பொருளில் அதிகமாகவும் ஐயம், உறுதியாக கூற முடியாமல், மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை - அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

**எடுத்துக்காட்டு**

- இன்றைக்கு மழை பெய்யுமோ?(ஐயம்)
- பூங்கொடியோ மலர் கொடியோ (இது அல்லது அது)
- ஏ - ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா எண், ஈற்றசை, தேற்றம் இசை நிறை ஆகிய ஆறு பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது
- தற்காலத்தில் ஏகாரம் தேற்ற பொருள்களில் அழுத்தம் மற்றும் வருகிறது
- எடுத்துக்காட்டு காந்தி அன்றே சொன்னார் நடந்தே வந்தான்
- தான் தான் என்னும் இடைச்சொல் அழுத்த பொருளில் மட்டும் வருகிறது சொற்றொடரில் எந்த சொல்லுடன் வருகிறதோ அதனை முதன்மைப்படுத்துகிறது
- ஒரு சொற்றொடரில் ஒரு முறை மட்டுமே அமைகிறது

நிர்மலா **தான்** நேற்று விழாவில் பாடினாள்

நிர்மலா நேற்று**தான்** விழாவில் பாடினாள்

நிர்மலா நேற்று விழாவில் **தான்** பாடினாள்

நிர்மலா நேற்று விழாவில் பாடினால் **தான்**

நிர்மலா **தான்** பாடினாள் - தான் என்பது **இடைச்சொல்.**

நிர்மலா **தானும்** பாடினாள்– தான் என்பது தற்சுட்டு படர்க்கை ஒருமை இட பெயர்.

**மட்டும்** – இச்சொல் வரையறை பொருளை தருகிறது. முடிந்தவரை,குறிப்பிட்ட நேரம் வரை என்ற பொருள்களிலும் வருகிறது.

**எ.கா;** படிப்பு மட்டும் இருந்தால் போதும்.

**ஆவது** – இது பல பொருள்களில் வரும் இடைச்சொல் ஆகும். **எ.கா;** ஐந்து பேராவது வாருங்கள் (குறைந்த அளவு) அவனாவது , இவனாவது செய்து முடிக்க வேண்டும். (இது அல்லது அது).

முதலாவது, இரண்டாவது (வரிசைப்படுத்துதல்)

- **கூட** – இச்சொல் குறைந்தப்பட்சம், முற்றுப் பொருள். எச்சம் தழுவிய கூற்று ஆகிய பொருள்களில் வருகிறது.

**எ.கா;**

- என்னிடம் ஒரு காசு **கூட** இல்லை. (குறைந்தப்பட்சம்)
- தெருவில் ஒருவர் கூட நடமாடவில்லை. (முற்றுப்பொருள்)
- அவனுக்கு வரையக்கூட தெரியும். ( எச்சம் தழுவிய கூற்று)

- ஆ – வினா பொருளில் வரும் இடைச்சொல்லாகும்.

**எ.கா ;**

- புகழேந்தி உன்னிடம் பேசினா**னா** ?
- புகழேந்தி நேற்று உன்னுட**னா** பேசினான் ?

- **ஆம் –** சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும் தகவலாகவும் வதந்தியாகவும் செய்தியை கூறுவதற்கு பயன்படுகிறது.

எ.கா.

- உள்ளே வர**லாம்** (இசைவு)
- இனியன் தலைநகர் போகிறா**னாம்** (தகவல்)
- பறக்கும் தட்டு நேற்று பறந்த**தாம்** (வதந்தி)

**உரிச்சொற்கள்**

உரிச்சொற்கள் பெயர்களையும், வினைகளையும், சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன.இவை இசை, குறிப்பு, பண்பு, என்னும் பொருளுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை, ஆனால் தனித்து வழங்கப்படுவது இல்லை. உரிச்சொற்கள் செயலுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகின்றார்.

| | |
|---|---|
| • கடிமலர் – மனம் மிக்க மலர்<br>• கடி நகர் - காவல் மிக்க நகர்<br>• கடி விடுதும் – விரைவாக விடுதும்<br>• கடி நுனி - கூர்மையான நுனி | பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் |
| சால, உறு , தவ, நனி, கூர், கழி, ஆகியன மிகுதி என்ற ஒரே பொருளை தருகின்றன.<br>**எடுத்துக்காட்டு;**<br>• சாலப் பேசினான்,<br>• நனி தின்றான்,<br>• கலி பேரு வகை,<br>• உறுபசி,<br>• தவச் சிறிது | ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல் |

**எச்ச வகைகள்**

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| • தெரிநிலை வினையெச்சம்<br>• குறிப்பு வினையெச்சம் | • தெரிநிலை பெயரெச்சம்<br>• குறிப்பு பெயரெச்சம் |

**பெயரெச்சம்**

ஒரு வினைச்சொல் முற்றிலும் பொருள் தருவதற்காக பெயர்ச்சொல்லை தழுவின் என்றால் அது பெயரெச்சம் ஆகும்.

> உண்ட இளங்கோவன் – உடன் பாட்டு தெரிநிலை பெயரெச்சம்
>
> உண்ணாத இளங்கோவன் – எதிர்மறை செரிநிலை பெயரெச்சம்

**எடுத்துக்காட்டு :**

நான் படித்த புத்தகம், பாடும் பறவை.

இது இரண்டு வகைப்படும்.
அவை ;


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

1. தெரிநிலை பெயரெச்சம்

2. குறிப்பு பெயரெச்சம்.

**தெரிநிலை பெயரெச்சம்**

தெரிநிலை பெயரெச்சம் காலத்தை வெளிப்படையாக காட்டி பெயர்ச்சொல்லை தழுவி முடிவது தெரிநிலை பெயரெச்சம் என்பது ஆகும்.

**எடுத்துக்காட்டு**

- படித்த பையன் - இறந்த காலம்
- படிக்கின்ற பையன் - நிகழ்காலம்
- படிக்கும் பையன் - எதிர்காலம்
- இவை முக்காலத்தையும், செயலையும், வெளிப்படையாக காட்டி செய்பவன் முதலான ஆறும் எஞ்சி நிற்கும்.
- உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்
- செய்த செய்கின்ற செய்யும் என்பன முறையே முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச வாய்ப்பாடுகள்.

**<u>எடுத்துக்காட்டு - உண்ட இளங்கோவன்</u>**

- செய்பவன் – இளங்கோவன்
- கருவி - கலம்
- நிலம் – வீடு
- செயல் - உண்ணுதல்
- செய்பொருள் - சோறு

உன்கின்ற இளங்கோவன், உண்ணும் இளங்கோவன் என நிகழ்காலம், எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்களையும் மேற்கண்டவாறு பொருத்தலாம்.

**குறிப்பு பெயரெச்சம்**

காலத்தையோ, செயலையோ, உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லை கொண்டு முடியும்.

**எடுத்துக்காட்டு ;** நல்ல பையன்

இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லை கொண்டு முடிந்துள்ளது. இது காலத்தை குறிப்பால் உணர்த்தும்.

**வினையெச்சம்**

ஒரு வினைச்சொல் முற்றிலும் பொருள் தருவதற்காக, ஒரு வினைமுற்று தழுவி வந்தால் வினையெச்சம் ஆகும். **எடுத்துக்காட்டு:**

படித்து முடித்தால் - இறந்த காலம்

காண விளைகின்றான் - நிகழ்காலம்

பேசினால் பயன் உண்டு – எதிர்காலம்

இதில் படித்து, காண, பேசினாள், என்பது வினையெச்சம் ஆகும்.

இது இரண்டு வகைப்படும் அவை;

1. தெரிநிலை வினையெச்சம்
2. குறிப்பு வினையெச்சம்

**தெரிநிலை வினையெச்சம்**

வெளிப்படையாக காலம் காட்டி வினைச்சொல்லை கொண்டு முடிவது தெரிநிலை வினையெச்சம் ஆகும்.

**எடுத்துக்காட்டு ;**

- பார்த்துச் சென்றான் – இறந்த காலம்
- பார்க்கச் சென்றான்– நிகழ்காலம்
- காணின் மகிழ்வான்– எதிர்காலம்

| | |
|---|---|
| பெயரெச்சம் | பெயர்ச்சொல்லை தழுவி பொருள் கொடுக்கும். எ.கா ; **வந்த பையன்** |
| வினையெச்சம் | வினைமுற்றை தழுவி பொருள் கொடுக்கும். எ.கா; **வந்து போனான்** |

**குறிப்பு வினையெச்சம்**

காலத்தை வெளிப்படையாக காட்டாமல் குறிப்பால் உணர்த்தி வினைச்சொல்லை தழுவி வருவது குறிப்பு வினையெச்சம் ஆகும்

**எடுத்துக்காட்டு ;** அருள் இன்றி செய்தனர் ; மெல்ல சென்றான்.

www.tnpscgroup4.in

**முற்றெச்சம்**

- மைதிலி வந்தனள் பாடினள்
- முருகன் படித்தனன் தேறினன்

மேற்கண்ட தொடர்களில் வந்தனள், படித்தனன் என்னும் வினைமுற்றுகள் வந்து, படித்து என்ற வினையெச்ச பொருள்களில் நின்று, வேறு வினைமுற்றுகளைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு ஒரு வினைமுற்று சொல், எச்ச பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றை கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

**இணைச்சொற்கள்**

**நேர் இணை சொற்கள்**

நாம் செய்திகளையும், கருத்துக்களையும், பிறரிடம் கூறும் பொழுது சுவைபட கூறுவதற்காக, ஒரே பொருள் தரும் இருச் சொற்களை பயன்படுத்துவது உண்டு. அவை நேர் இணைச் சொற்கள் எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

- கண்ணுங்கருத்துமாக படிப்பாள்.
- வளவனின் தந்தை பேரும் புகழும் மிக்கவர்.

**எதிர் இணைச்சொற்கள்**

எதிர் பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துதல் எதிர் இணைச்சொற்கள் எனப்படும்.

**எடுத்துக்காட்டு ;**

- கோபாலன் **உயர்வுதாழ்வின்றி** அனைவரிடமும் பழகுவான்
- மலர் கொடியின் தந்தை **அல்லும் பகலும்** அயராது உழைப்பவர்

**செறிவிணைச் சொற்கள்**

பொருளின் செறிவை குறித்து வருவன செறியிணை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :** பச்சைபசேல், வெள்ளைவெளேர், கன்னங்கரேல், வாடிவதங்கி, நட்டநடுவில்

## 2. இலக்கிய வகை

**இயற்சொல்;**

எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.

**எ.கா:**

கடல், கப்பல், எழுதினான், படித்தான்

**இயற்சொல் வகைகள்**

| | |
|---|---|
| பெயர் இயற்சொல் | மண், பொன் |
| வினை இயற்சொல் | நடந்தான், வந்தான் |
| இடை இயற்சொல் | அவனை, அவனால் |
| உரி இயற்சொல் | மாநகர் |

**திரிசொல்:**

கற்றோர்க்கு மட்டுமே விளங்குபவையாகவும், இலக்கியங்களில் மட்டுமே பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் திரிசொற்கள் எனப்படும். **எ.கா; வங்கூழ் , அழுவம், சாற்றினான், உறுபயன்,**

ஈடு இணையற்ற, ஓங்கியுயர்ந்த

**நேர் இணை சொற்கள்**

இரவு பகல், கீரியும் பாம்பும்

**எதிர் இணைச்சொற்கள்**

| | |
|---|---|
| பெயர்த் திரிசொல் | அழுவம், வங்கம் |
| வினைத் திரிசொல் | இயம்பினான், பயின்றான் |
| இடைத் திரிசொல் | அன்ன,மான |
| உரித் திரிசொல் | கூர்,கழி |

**பெயர்த்திரிச்சொற்கள்**

- எயிறு – பல்
- வேய் – மூங்கில்
- மடி – சோம்பல்.
- நல்குரவு – வறுமை
- பீலி – மயில்தோகை
- உகிர் – நகம்
- ஆழி – கடல், சக்கரம்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**வினை திரி சொற்கள்**

வினவினான் – கேட்டான்

விளித்தான் -அழைத்தான்

நோக்கினார் - பார்த்தார்

சூடினர் -அணிந்தனர்

**ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள்**

வங்கம், அம்பி, நாவாய் – என்பன கப்பல் என்னும் ஒரே பொருளை தருகின்றன.

**பல பொருள் குறித்த ஒரு திரிசொல்**

இதழ் என்னும் சொல் பூவின் இதழ், கண்ணிமை, பனையேடு, நாளிதழ் போன்ற பல பொருள்களை தருகின்றது.

**திசை சொல்**

வடமொழித் தவிர பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் திசை சொற்கள் எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

சாவி, ஜன்னல், பண்டிகை, ரயில், சிபாரிசு, மார்க்கெட் முக்காலத்தில் பாண்டிய நாட்டுத் தவிர தமிழ்நாட்டின் பிறப்பகுதிகளில் வழங்கிய கேணி (கிணறு), பெற்றம் (பசு) போன்ற சொற்களும் திசை சொற்களே ஆகும்.

**வடசொல்**

வடமொழியில் (சமஸ்கிருதம்) இருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் வட சொற்கள் எனப்படும். **எ.கா** (வருடம், மாதம் ,கமலம், விடம், சக்கரம்)

**வடசொல் இரண்டு வகைப்படும்**

தற்சமம் வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதப்படுவது தற்சமமாகும்.

**எ.கா;** (கமலம், அலங்காரம்)

வடமொழியில் உள்ள சொற்களை தமிழ் மொழிக்கு ஏற்ப தமிழ் எழுத்துக்களால் மாற்றி எழுதப்படுவது தற்பவமாகும்.

**எடுத்துக்காட்டு ;**

லட்சுமி – இலக்குமி ; விஷம் - விடம் ; பங்கஜம் – பங்கயம் வருஷம் - வருடம் தனிக்குறிலை அடுத்து ர, கர, ஒற்று வந்தால் அது வடமொழி சொல்லாகும்.

**எடுத்துக்காட்டு :** அர்ச்சுனன், சர்ப்பம், அர்ச்சனை.

## வழக்கு

நம் தமிழ் மொழியில் எண்ணற்ற சொற்கள் இருக்கின்றன. அந்தச் சொற்களை எல்லாம் நாம் விரும்பியபடி எல்லா இடங்களிலும் பயன்படுத்த முடியாது. இன்னின்ன இடங்களில், இன்னற்றை பயன்படுத்த வேண்டும் என்ற வழக்கு உள்ளது. அவ்வாறு வழங்குவதற்கு வழக்கு என்று பெயர்.

| வழக்கு | |
|---|---|
| **இயல்பு வழக்கு** | **தகுதி வழக்கு** |
| • இலக்கணம் உடையது<br>• இலக்கண போலி<br>• மரூஉ | • இடக்கரடக்கல்<br>• மங்கலம்<br>• குழூ உக் குறி |

**இயல்பு வழக்கு**

**இலக்கணம் உடையது.**

- இலக்கணத்துக்கு உட்பட்டு குற்றமில்லாமல் வழங்கி வருவது.

**எடுத்துக்காட்டு ;**

- குயில் பாட, மயில் ஆட, மருதம் வீற்றிருந்தது.
- திருக்குறளின் சிறப்பு உலகமெல்லாம் பரவியுள்ளது.

**இலக்கண போலி**

இலக்கணத்திற்கு உட்பட்ட இரண்டு சொற்கள் மாறி, முன்பின் முறை பிறழ்ந்து அமைந்திருப்பது இலக்கண போலி ஆகும்.

| இலக்கணம் உடையது | இலக்கண போலி |
|---|---|
| | |

| | |
|---|---|
| நகர்ப்புறம் | புறநகர் |
| இல்வாய் | வாயில் |

**மரூஉ:**

எழுத்துக்கள் சிதைந்து உருமாறி வழங்கி வருவது மரூஉ எனப்படும்.

| இலக்கணம் உடையது | மரூஉ |
|---|---|
| சோழ நாடு | சோனாடு |
| கோவன்புத்தூர் (கோயம்புத்தூர்) | கோவை |
| திருநெல்வேலி | நெல்லை |

**தகுதி வழக்கு**

- **இடக்கரடக்கல்**

  சான்றோர் முன் கூறத்தகாத சொற்களைக் கூறாமல், பிற மொழிகளால் அக்கருத்தை புலப்படுத்துவது இடக்கரடக்கல் ஆகும். தொல்காப்பியம் இதனை **அவையல் கிளவி** என்று கூறுகிறது.

  **எடுத்துக்காட்டு** ; கால் கழுவி வந்தான்.

- **மங்கலம்**

  மங்கலம் இல்லாதவற்றை மங்கலமாகக் கூறுவது.

  **எடுத்துக்காட்டு;**

  இறந்துவிட்டார்– இறைவன் திருவடி சேர்ந்தார் (இயற்கை எய்தி விட்டார்)

  போகிறேன் – (போய் வருகிறேன்)

**குழூஉக்குறி**

ஒரு கூட்டத்தார் மற்றவருக்கு தெரியாமல், தங்களுக்குள்ளே புரியும் வகையில் வழங்கிக் கொள்ளும் சொல் குழூஉக்குறி ஆகும்.

**எடுத்துக்காட்டு:**

| வெள்ளையப்பன் | பணம் |
|---|---|
| ஒரு கைவீசு | ஐந்து ரூபாய் |
| ஒரு முடிச்சு | கால் ரூபாய் |

இவை காலத்திற்கு காலம் மாறிக்கொண்டே இருக்கும்.

**மூவகை மொழிகள்**

மூவகை மொழி
- ஒரு மொழி
- தொடர் மொழி
- பொதுமொழி

**ஒருமொழி**

ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது தனி மொழியாகும்.

**எடுத்துக்காட்டு ;**

வா, போ,தேன், மான், நிலம், கண், என்று பேசப்படுபவை ஒரு மொழியாகும்.

**தொடர்மொழி**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருளை உணர்த்துவது தொடர் மொழியாகும்.

**எடுத்துக்காட்டு**

- கடமை செய்
- அறநூல் படி
- ஆறுதல் கூறு
- படம் பார்த்தான்
- வீடு கட்டினான்
- நிலம் வலிது

**பொதுமொழி**

- பொதுமொழி என்பது ஒரு சொல்லாக இருந்து, ஒரு பொருளை பிரித்து எழுதும் பொழுது வேறு ஒரு பொருளையும் தருவதாகும்.

- அந்தமான் - ஒரு தீவு
- அந்த + மான் – ஒரு விலங்கு
- முட்டாள் - அறிவு இல்லாதவனை குறிக்கும் சொல்
- முள் + தாள் - முல்லுடைய தாளைக் குறிக்கும்
- தாமரை – தாமரை மலர்

www.tnpscgroup4.in

- தா + மரை – தாவுகின்ற மான் (மரை–மான்)

**வேற்றுமை**

ஒரு பெயரின் பொருளை வேறுபடுத்தி காட்டுவது வேற்றுமை எனப்படும். பொருளை வேறுபடுத்தி காட்ட துணை செய்யும் மற்றொரு உறுப்பு வேற்றுமை உருபு எனப்படும்.

**முதல் வேற்றுமை**

இதற்கு உருபு கிடையாது. இயல்பான பெயர் (எழுவாய்) பயனிலையைக் கொண்டு முடிவது முதல் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை எனப்படுகிறது. இவ்வேற்றுமை வினைமுற்றையும் பெயரையும், வினாவையும், பயனிலையாக கொள்ளும்.

- அமைச்சர் வந்தார் - வினைமுற்று பயனிலை
- இவர் அமைச்சர் - பெயர் பயனிலை
- இவர் அமைச்சரா ? – வினாப் பயனிலை

**இரண்டாம் வேற்றுமை**

இவ் வேற்றுமையின் உருபு ஐ என்பதாகும். இதனை செயப்படுபொருள் வேற்றுமை என்றும் கூறுவர். **கயல்விழி புத்தகத்தை படித்தாள்–** என்ற தொடரில் **புத்தகம்** என்ற பெயர்ச்சொல் **ஐ** என்ற வேற்றுமை உருப்பினை ஏற்று, புத்தகத்தை என்று செயப்படு பொருளாக மாறி நிற்பதால் செய்யப்படும் பொருள் வேற்றுமை என வழங்கப்படுகிறது, இவ்வேற்றுமை எட்டு பொருள்களில் அமையும்.

| | |
|---|---|
| • கல்லூரியை நிறுவினான் | ஆக்கல் |
| • மூடநம்பிக்கைகளை ஒழித்தான் | அழித்தல் |
| • வெற்றியை அடைந்தான் | அடைதல் |
| • குடியை விட்டான் | நீத்தல் |
| • கொடியைப் போன்றவள் | ஒத்தல் |
| • பண்பை உடையவன் | உடைமை |
| • அணிகலனை விரும்பினால் | விரும்பல் |
| • இலக்கணத்தை அறிந்தான் | அறிதல் |

**மூன்றாம் வேற்றுமை**

இவ்வேற்றுமையின் உருபுகள் ஆள், ஆண், ஒடு, ஓடு, உடன், முதலியன. கருவி, கருத்தா

உடனிகழ்ச்சி முதலிய மூன்று பொருள்களில் இவ்வேற்றுமை அமையும்.

| | |
|---|---|
| • எழுதுகோலால் எழுதினான்<br>• துரிகையான் வரைந்தான் | கருவி |
| • தந்தையால் தொடங்கப்பெற்றது.<br>• தனயனான் வளர்க்கப்பட்டது. | கருத்தா |
| • கோவலனோடு மாதவி வந்தாள்<br>• கோலனோடு கண்ணகி சென்றாள்<br>• தந்தையுடன் தாயும் வந்தாள் | உடனிகழ்ச்சி |

**சொல்லுருபுகள்:** கொண்டு உடன்
கருவி பொருள்– முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.கருவியே பொருளாக மாறுவது முதற்கருவி
**எடுத்துக்காட்டு** ; மரத்தால் சிலை செய்தான்

ஒன்றை செய்வதற்கு துணையாக இருப்பது துணைக்கருவி

**எடுத்துக்காட்டு** ; உளியால் சிலை செய்தான்

**கருத்தா பொருள் –** ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இரு வகைப்படும்

- பிறரை செய்ய வைப்பது **ஏவுதல் கருத்தா** ஆகும்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**எடுத்துக்காட்டு**: கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது.

- தானே செய்தல் **இயற்றுதல் கருத்தாகும்.**

**எடுத்துக்காட்டு**: சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது.

- ஆன் என்னும் உருபு பெரும்பாலும் செய்யுளில் இடம்பெறும்

**எடுத்துக்காட்டு:** புறந்துாய்மை நீரான் அமையும்.

**நான்காம் வேற்றுமை**

இவ்வேற்றுமையின் உருபு கு என்பதாகும். இவ்வேற்றுமை ஏழு பொருள்களில் அமையும். **எடுத்துக்காட்டு**

- ஏழைக்கு உணவு அளித்தான்–கொடை
- நீருக்கு பகை நெருப்பு -பகை
- ஏழைக்கு நண்பன் ஈகையாளன் -நட்பு
- மனைக்கு உரியவள் மனைவி -தகுதி
- உறவுக்கு நட்பு -அதுவாதல்
- கூழுக்கு பாடினான் புலவன்-பொருட்டு
- குழந்தைக்கு தாய் அவள் -முறை

**சொல்லுருபுகள் ;** பொருட்டு நிமித்தம்

நான்காம் வேற்றுமை – தமிழ்நாட்டுக்கு கிழக்கு வங்கக்கடல் எல்லை.

நான்காம் வேற்றுமை உருபுடன் கூடுதலாக **ஆக** என்னும் அசை சேர்ந்து வருவதும் உண்டு.

**எடுத்துக்காட்டு ;** கூலிக்காக வேலை

**ஐந்தாம் வேற்றுமை**

ஐந்தாம் வேற்றுமையை உருது, இல், இன், என்பன, இவ்வேற்றுமை நான்கு பொருட்களில் அமையும்.

**எடுத்துக்காட்டு ;**

- கண்ணின் கடை பார்வை – நீங்கள்
- வறுமையில் கொடியது பகைமை – ஒப்பு
- இந்தியாவின் தெற்கு குமரி – எல்லை
- கொடையில் சிறந்தவர் பாரி– ஏது காரணம்

**சொல்லுருபுகள்–** இருந்து, நின்று, விட, காட்டிலும்

**இல்** –என்னும் உருபு ஐந்தாம் வேற்றுமையிலும், ஏழாம் வேற்றுமையிலும் வரும். நீங்கல் பொருளில் வந்தால் ஐந்தாம் வேற்றுமை என்றும், இடப்பொருளில் வந்தால் ஏழாம் வேற்றுமை என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

**ஆறாம் வேற்றுமை**

ஆறாம் வேற்றுமையின் உருபு, அது, ஆது, என்பன. உடைய என்பது சொல்லுருபாக வரும். அது ஆது என்பன ஒருமைக்கும் அ என்பது பன்மைக்கும் வரும். ஆது என்பது தற்பொழுது வழக்கில் இல்லை.

**எடுத்துக்காட்டு** 1. எனது நாடு (என்+அது); எனாது கை (என்+ ஆது); என கரங்கள் (என்+அ)

குறிப்பு; எனது கரங்கள், உனது புத்தகங்கள் என்பன பிழையானவை. கரங்கள், புத்தகங்கள் என்பன பன்மை.

**எடுத்துக்காட்டு** 2. அவனுடைய புதல்வன் – இங்கு உடைய என்னும் சொல்லே உருபாக அமைந்துள்ளது.

ஆறாம் வேற்றுமை தற்கிழமை, பிறிதின் கிழமை ஆகிய இரண்டு பொருள்களில் வரும். கிழமை என்றால் உரிமை என்பது பொருளாகும்.

சொல்லுருபு ; உடைய

| **தவறு** | **சரி** |
|---|---|
| அவனது மகள் | அவனுடைய மகள்<br>அவனுக்கு மகள் |
| எனது நண்பன் | என்னுடைய நண்பன்<br>எனக்கு நண்பன் |
| உன் பகைவர் | உனக்கு பகைவர்<br>உன்னுடைய பகைவர் |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**தற்கிழமை;**

தன்னோடு இயைந்த பிரிக்க முடியாத ஒன்றாகும்.

**எடுத்துக்காட்டு** கண்ணினது– ஒளி, பெண்ணின்– அழகு, மலரினது - மென்மை,

தென்றலினது – தன்மை.

கண்ணையும் – ஒளியையும்,பெண்ணையும் – அழகையும்,மலரையும் மென்மையும்

தென்றலையும் குளிர்ச்சியையும் பிரிக்க இயலாது.

**பிறிதின்கிழமை:**

தன்னோடு வேறான, பிரிக்க முடிகின்ற ஒன்றாகும்.

**எடுத்துக்காட்டு** மார்பு மேலது துகில், வீரனின் கையேது வேல், கண்ணகியின் காலது சிலம்பு

மார்பையும் துகிலையும்,வீரணையும் வேலையும்,

கண்ணகியின் காற்சிலம்பையும் பிரிக்க இயலும்.

**'ஏழாம் வேற்றுமை**

இவ்வேற்றுமைக்கு 28 உருபுகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை இல், இடம்,

கண், உள், மேல், கீழ் முதலியன.

**எடுத்துக்காட்டு;**

- தமிழில் இனிமை உண்டு.
- பாலின் கண் சுவை உள்ளது.
- கூரையின் மேல் சேவல் உள்ளது.
- மக்களிடம் அன்பு உள்ளது
- பெட்டிக்குள் பணம் உள்ளது.
- கட்டலின் கீழ் நாய் படுத்து உள்ளது.

**தற்கிழமை அமையும் இடங்கள்**

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|

**பிறதின் கிழமை அமையும் இடங்கள்**

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|

**எட்டாம் வேற்றுமை**

வேற்றுமைக்கு உருபு கிடையாது இது விழியாக அமையும் எனவே இதை விளி வேற்றுமை எனக் கூறுவர் பெயர்விலியாக மாறும் பொழுது பெயரின் வீட்டில் சில மாறுதல்கள் ஏற்படும்.

**எடுத்துக்காட்டு**

- இறைவன்– இறைவனே (ஈற்றெழுத்து திரிதல்)
- புலவன் - புலவ (ஈற்றெழுத்து கெடில்)
- வாயிலோய் - வாயிலோயே (ஏகாரம் மிக்கது)
- மக்கள் - மக்காள் (ஈற்றெழுத்து திரிதல்)

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை (எழுவாய்) | இல்லை | ஆனவன்,ஆவான்,ஆகின்றவன் | பயனிலை ஏற்றல் |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | இல்லை | செயப்படு பொருள் |
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு,ஒரு | கொண்டு,வைத்து உடன், கூட | கருவி,கருத்தா,உடனிகழ்ச்சி |
| நான்காம் வேற்றுமை | கு | ஆக,பொருட்டு, நிமித்தம் | கொடை,பகை,நட்பு,தகுதி, அதுவாதல்,பொருட்டு,முறை, எல்லை |
| ஐந்தாம் வேற்றுமை | இல்,இன் | இதிலிருந்து, நின்று காட்டிலு | நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | | |
|---|---|---|---|
| | | ம்,பார்க் கிலும் | |
| ஆறாம் வேற்றுமை | அது, இது, அ | உடைய | கிழமை |
| ஏழாம் வேற்றுமை (விளி) | 28 உருபுகள் | – | – |
| எட்டாம் வேற்றுமை (விளி) | இல்லை | இல்லை | விளி (அழைத்தல்) |

**தொகைநிலைத் தொடர்கள்**

இரண்டு சொற்களை இணைத்துச் சொற்றொடர் அமைக்கும் பொழுது பொருள் தருவதற்காக அவற்றின் இடையே சில சொற்களைச் சேர்ப்பதுண்டு. சில சமயங்களில் சேர்க்காவிடினும் இச்சொற்கள் இருப்பது போல் கருதிப் பொருள் கூறுவர். இங்ஙனம் சொற்கள் சேர்க்கப்படாமல் மறைந்து நின்று பொருள் தருவதற்குத் தொகை என்று பெயர். இத்தொகை அமைந்துள்ள தொடருக்கு தொகைநிலைத் தொடர் என்று பெயர். இது ஆறு வகைப்படும்.

**1. வேற்றுமைத் தொகை**

இரண்டு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபுகள் மறைந்து வந்தால் அது வேற்றுமை தொகை எனப்படும். முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை தவிர பிற ஆறு வேற்றுமைத் தொடர்களுக்கும் உருபு உண்டு.

**எ.கா;**

| | தொகை நிலைத் தொடர் | மறைந்த உருபு | தொகா நிலைத் தொடர் |
|---|---|---|---|
| **2–ம் வேற்றுமை** | மொழி கற்றான் | ஐ | மொழியைக் கற்றான் |
| **3–ம் வேற்றுமை** | தலை வணங்கினான் | ஆல் | தலையால் வணங்கினான் |
| **4–ம் வேற்றுமை** | கல்லூரி சென்றான் | கு | கல்லூரிக்கு சென்றான் |
| **5–ம் வேற்றுமை** | கண் கடைப்பார்வை. மலையருவி | இன் /இல் | கண்ணின் கடைப்பார்வை மலையில் அருவி |
| **6–ம் வேற்றுமை** | கண் பார்வை | அது | கண்ணினது பார்வை |
| **7–ம் வேற்றுமை** | பாற்சுவை | கண் | பாலின் கண் சுவை |

**2. வினைத்தொகை**

சில சொற்றொடர்களில் காலம் மறைந்து நின்று பொருள் தருவதுண்டு.அச்சொற்றொடர்களில் மூன்று காலமும் மறைந்து இருக்கும்.அதை விரித்தால் மூன்று காலத்திற்கும் பொருந்தி வரும்.

**எ.கா;**

| | | |
|---|---|---|
| குடிநீர்– குடித்த நீர்; | குடிக்கின்ற நீர்; | குடிக்கும் நீர் ; |
| பாய்புலி – பாய்ந்தபுலி; | பாய்கின்ற புலி; | பாயும் பலி. |

**3. பண்புத்தொகை**

சொற்றொடரில் பெயர்ச்சொல்லுக்கு இடையே – **ஆகிய, ஆன**, என்கிற பண்புருபுகள் மறைந்து வரும். சொற்களை பிரிக்கும் பொழுது நிலைமொழி ஈற்றில் **மை விகுதி** பெற்று வரும்.

**எ.கா;**

| | | |
|---|---|---|
| செந்தாமரை | செம்மை + தாமரை | செம்மையாகிய தாமரை |
| கடுங்கதிர் | கடுமை + கதிர் | கடுமையாகிய கதிர் |
| முதூர் | முதுமை + ஊர் | முதுமையாகிய ஊர் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | |
|---|---|---|
| இன்சொல் | இனிமை + சொல் | இனிமையாகிய சொல் |

## 4. உவமைத் தொகை

ஒரு பொருளை சிறப்பித்துக் கூறுவதற்கு அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளை சேர்த்துக் கூறும் பொழுது **(போல,போன்ற, புரைய, ஒப்ப)** ஆகிய உவம உருபுகள் மறைந்து வந்தால் அது உவமைத்தொகை எனப்படும்.

எ.கா;

மதிமுகம், மலர் அடி, துடி இடை ; மதி (போன்ற) முகம் , மலர் (போன்ற) அடி

## 5. உம்மைத் தொகை

நிலைமொழிக்கும், வருமொழிக்கும் இடையில் உம் என்னும் இதைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகை ஆகும்.

**எடுத்துக்காட்டு;**

| உம்மைத் தொகை | விரிவான சொல் |
|---|---|
| இயல் இசை | இயலும் இசையும் |
| எண் எழுத்து | எண்ணும் எழுத்தும் |
| இராப்பகல் | இரவும் பகலும் |

## 6. அன்மொழித் தொகை

வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகைகளை அடுத்து ஒரு சொல் தொடர்ந்து வருவது அன்மொழித் தொகை எனப்படும். **எடுத்துக்காட்டு;**

| | |
|---|---|
| பொற்கொடி நடந்தாள் | பொன்னால் ஆகிய கொடியின் தன்மை கொண்ட பெண் நடந்தாள். |
| தேன்மொழி நகைத்தாள் | தேன் போன்ற மொழியை உடையாள் நகைத்தாள் |

**<u>இருபெயரொட்டுப் பண்புத்தொகை</u>**

இரண்டு பெயர்ச்சொற்கள் ஒட்டிய சொற்றொடரில் நிலைமொழி சிறப்பு பெயராகவும், வருமொழி பொதுப்பெயராகவும், **ஆகிய**, என்னும் பண்பு உருபு மறைந்தும் வருமாயின் அது இரு பெயரொட்டு பண்புத்தொகை எனப்படும்.

**எ.கா:**

| | சிறப்பு பெயர் | பொதுப் பெயர் |
|---|---|---|
| சாரைப்பாம்பு | சாரை | பாம்பு |
| பாரத நாடு | பாரதம் | நாடு |
| தமிழ் மொழி | தமிழ் | மொழி |

**<u>உருபும் பயனும் உடன்தொக்க தொகை</u>**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து வருவது உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும்.

**எ.கா:** பணப்பை

இது பணத்தைக் கொண்ட பை என விரிந்து பொருள் தருகிறது. பணம், பை என்னும் இரு சொற்களுக்கு இடையில் ஐ என்னும் வேற்றுமை உருபும் கொண்ட என்னும் சொல்லும் (உருபின் பயன்) மறைந்து வந்துள்ளன.

- **இரண்டாம் வேற்றுமை உருபும் உடன் தொக்க தொகை**

  எடுத்துக்காட்டு ; பால்குடம் – பாலை கொண்ட குடம்.

- **மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.**

  எடுத்துக்காட்டு ; பொற்சிலை – பொன்னால் ஆகிய சிலை.

- **நான்காம் வேற்றுமை உருபு பயனும் உடன் பக்க தொகை.**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

எடுத்துக்காட்டு ; மாட்டு கொட்டகை– மாட்டுக்கு கட்டப்பட்ட கொட்டகை.

பழம் பால் = பழமை + பால் அதாவது பழைய பால் என்று பொருளாகும்.

பழம் பால்– உம்மைத்தொகை

பழம் + பால் அதாவது பழமும் பாலும் என்று பொருளாகும்.

'உம்' விகுதி மறைந்து வந்துள்ளது.

**உவம உருபுகள்**

போல புரைய ஒப்ப

உறல மான கடுப்ப இயைய ஏய்ப்ப

நேர நிகர அன்ன இன்ன

என்பவும் பிறவும் உவமத் துருபே

**- நன்னூல்**

தேர் பாகன் – இது தேரை ஓட்டும் பாகன் என்னும் பொருளை உணர்த்துகிறது.

ஐ என்னும் வேற்றுமை அமைந்ததால் இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும்.

- போல- மயில் போல ஆடினாள்
- உறழ - முழவு உறழ் தடக்கை
- புரைய - வேய்புரை தோள்
- ஒப்ப- மண்ணோப்ப ஒழுகும் மக்கள்
- அன்ன - மலரன்ன சேவடி

தமிழ் தொண்டு - இது தமிழுக்குச் செய்யும் தொண்டு என்னும் பொருளை உணர்த்துகிறது.

கு என்று வேற்றுமை உருபு அமைந்ததால் இது நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும்.

**உவமை**

வினை –தொழில், பயன், வடிவம் (மெய்), உரு (நிறம்) என்ற நான்கின் அடிப்படையில் உவமை தோன்றும்.

**வினைப் பயன் மெய் உரு**

**என்ற நான்கே வகைப் பெற வந்த உவமத் தோற்றம்.**

- தொல்காப்பியம்.

**எடுத்துக்காட்டு ;**

- புலி போல பாய்ந்தான்- வினை தொழில்
- மலை போல கொடுக்கும் கை- பயன்
- துடிபோலும் இடை - வடிவம் மெய்
- தளிர் போலும் மேனி - நிறம்.

**புதுக்கவிதைகளில் உவமை**

**பயன் உவமை**

வறண்ட வாழ்வு துளிர்க்க மலை போல் வந்தாய் நீ !

**மெய் உவமை**

சுருக்கிய இடையை போல தோன்றும் அசோக மரம்.

**உரு உவமை**

சோடிய விளக்காய் மாலை நேர சூரியனின் மஞ்சள் வெளிச்சம் தெருவில் நிரம்பி வழிந்தது.

**விரி உவமை**

உவமை, உவமேயம் இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக அமைந்தால் அது விரி உவமை எனப்படும். இது உவமை தொடர் எனப்படும்.

எடுத்துக்காட்டு: தேன் போன்ற மொழி

**தொகை உவமை**

உவமை உவமேயம் இரண்டிற்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்தால் அது தொகை உவமை எனப்படும் இதனை உவமத் தொகை என்றும் கூறுவர்.

எடுத்துக்காட்டு: பவளவாய்

- உவமை- பவளம்
- உவமேயம் - வாய்

**புதுக்கவிதைகளில் உவமை**

**உவமை**

தண்ணீரை நீ துடைத்த போது நட்சத்திரங்கள் துடைக்கப்பட்ட வானம் போல் உன் முகம் இருண்டு போயிருந்தது.

**வினை உவமை**

அவர்கள் மூலையில் விதையைப் போல் தூவப்பட வேண்டிய அறிவு

ஆணியைப் போல் அறையப்படுகின்றது.

**உருவகம்**

இதில் உவமேயம் முதல் பகுதியாகவும் உவமை இரண்டாவது பகுதியாகவும் அமைந்திருக்கும்.

உவமானம், உவமேயம் இரண்டும் ஒன்றாகவே அமைந்திருக்கும்.

எடுத்துக்காட்டு:

வாய்ப்பவளம் உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறு படுத்தாமல் இரண்டும் ஒன்றே எனக் கூறுவது உருவகம் எனப்படும்.

உருவகத் தொடரில் உவமேயம் உவமிக்கப்படும் பொருள், முன்னும் உவமை ஒப்பாக காட்டப்படும், பொருள் பின்னுமாக அமையும். உவமையின் செரிவார்ந்த வடிவமே உருவகமாகும்.

**உருவகம் வகைகள்**

- வினை
- பயன்
- வடிவம் (மெய்)
- உரு (நிறம்)
- வினை உருவகம்: எண்ணவலை பின்னும் மூளை சிலந்தி (சிந்தனை)
- பயன் உருவகம்: ஆவேச புயல்களாலும் அசைக்க முடியாத ஆகாச பூ சூரியன்
- வடிவ உருவகம்: நீல வயலின் நட்சத்திர மணிகள் வானமும் விண்மீன்களும்
- உரு உருவகம் : மலை கிழவியின் நரைத்த கூந்தல் நிறம்

**தொகாநிலைத் தொடர்கள்**

ஒரு தொடரில் இரு சொற்கள் அமைந்து இரண்டிற்கும் இடையில் சொல்லோ ஒருபோ மறையாது தொகாநிலைத் தொடர் எனப்படும். இஃது ஒன்பது வகைப்படும்:

**எழுவாய் தொடர்:** எழுவாயைத் தொடர்ந்து பெயர் வினை வினா ஆகிய பயனிலைகள் தொடர்ந்து வந்தால் அது எழுவாய் தொடராகும்.

**எடுத்துக்காட்டு:** கண்ணன் வந்தான்– கண்ணன் என்னும் எழுவாய் தொடர்ந்து வந்தான் என்னும் வினை பயனிலை வந்துள்ளது.

- இனியன் கவிஞர் - பெயர் பயனிலை
- பேருந்து வருமா - வினாப் பயனிலை.

**விளிதொடர்**

- கதிரவா வா!
- மயிலே நீ தூது செல்லாயோ?
- தேரா மன்னா!

மேற்கண்ட தொடர்களில் கதிரவா, மயிலே, மன்னா ஆகியவை விளி சொற்களாகும்.

**வினைமுற்றுத் தொடர்**

வினைமுற்று முதலில் வந்து பெயர்ச்சொல் தொடர்ந்து வந்தால் அது வினைமுற்றுத் தொடராகும்.

எடுத்துக்காட்டு:

- கண்டேன் சீதையை ↓
- அழைத்தனர் உற்றார்
- பாடினாள் கண்ணகி

**பெயரெச்சத் தொடர்**

பெயர் சொல்லைக் கொண்டு முடியும் எச்ச வினை பெயரெச்ச தொடராகும்.

**எடுத்துக்காட்டு**

- விழுந்த மரம்
- கேட்ட பாடல்

**வினை எச்சத் தொடர்**

வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்ச வினை வினையெச்சத் தொடராகும்.

**எடுத்துக்காட்டு** : வந்து சென்றான், பாடி மகிழ்ந்தனர்.

**வேற்றுமை தொகாநிலைத் தொடர்:**

வேற்றுமை உருபு வெளிப்படையாக அமைந்தால் அது வேற்றுமை தொகாநிலைத் தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

- வீட்டை கட்டினான் ஐ
- விழியால் பேசினாள் (ஆல்)
- மொழிக்கு இசைந்தான் (கு)
- ஊரின் நீங்கினர் (இன்)
- பிரிவின் கண் துன்பம் (கண்)

**இடைச்சொற்றொடர்**

மற்றொன்று = மற்று + ஒன்று

மற்று என்னும் இடைச்சொல்லை அடுத்து ஒன்று என்னும் சொல் தொடர்ந்து வந்ததனால் இது இடை சொற்றொடர் ஆகும்.

உரி சொற்றொடர் உரி சொல்லைத் தொடர்ந்து வேறு சொல் வரும்பொழுது உரி சொற்றொடர் ஆகும்.

- மாமுனிவர்= மா (உரி சொல்)
- சால சிறந்தது = சால (உரிசொல்)
- கடிமணம் = கடி (உரிச்சொல்)

**அடுக்குத்தொடர்**

ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்து பிரித்தால் பொருள் தருவது அடுக்குத்தொடர் ஆகும்.

**எடுத்துக்காட்டு**

- வாழ்க! வாழ்க!
- வா, வா
- வருக! வருக! வருக.!

**அடைமொழி சொல்**

ஒரு பொருள் பலவகைப்பட்டதாக இருப்பின் அவற்றை இனம் பிரித்துக் காட்ட ஒரு தனிச் சொல்லை சேர்த்துக் குறிப்பர். அச்சொல்லுக்கு அடைமொழி எனப் பெயராகும்.

**எ.கா;** பாடநூல் – பொதுச் சொல் ; தமிழ் பாடநூல் – அடைமொழி சொல்

**அடைமொழி சொல்**

**இனமில்லா அடைமொழி**

**எடுத்துக்காட்டு ;** வெண்ணிலவு , கரு நிலவு, கருங்காக்கை, வெண் காக்கை, செங்காக்கை என்று ஓர் இடம் கிடையாது.

**இனமுள்ள அடைமொழி**

**எடுத்துக்காட்டு :** பால் சோறு இதற்கு இனமாக தயிர் சோறு புளியஞ்சோறு கீரை சோறு என்று கூறலாம்.

**ஒரு பொருட் பன்மொழி**

ஒரே பொருளைத் தரும் வெவ்வேறான சொற்கள் தொடர்ந்து வருவது ஒரு பொருள் பன்மொழி எனப்படும்.

**எடுத்துக்காட்டு,**

ஒரு தனி, ஓங்கி உயர்ந்த, நடு மையம், மீ மிசை ஞாயிறு.

**அடுக்குத்தொடர்**

பொருள் உடைய ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வருதல் அடுக்குத்தொடர் எனப்படும்.

**எடுத்துக்காட்டு,**

நன்று நன்று, ஓடு ஓடு, வாழ்க வாழ்க, பிடி பிடி.

| | |
|---|---|
| அன்றே அன்றே – அசைநிலை | தீ தீ தீ - அச்சம் |
| போ போ – விரைவு | நொந்தேன் நொந்தேன் – துன்பம் |
| எறி எறி - சினம் | கோடி கோடி கோடியே – இசை நிறை |
| வருக வருக – மகிழ்ச்சி | |

மேற்கண்ட ஏழு பொருள்களில் அடுக்குத்தொடர் அமையும்.

**இரட்டைக்கிளவி (கிளவி சொல்)**

பொருள் இல்லாத ஒரே சொல் இரண்டு முறை அடுக்கி வந்து பொருள் தருவதற்கு இரட்டைகிளவி என்று பெயர்.

**எடுத்துக்காட்டு ;**

- சல சலவென்று தண்ணீர் ஒடிற்று.
- மட மடவென்று மரம் முறிந்தது.
- கல கலவென்று சிரித்தான்.

**அடுக்குத்தொடருக்கும், இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடு**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| • சொற்களை பிரித்தாலும் பொருள் தரும் • நான்கு சொற்கள் வரையிலும் அடுக்கி வரும் • விரைவு வெகுளி உவகை அச்சம் துன்பம் ஆகிய பொருள்களில் வரும். | • சொற்களை பிரித்தால் பொருள் தராது. • இரண்டு சொற்கள் வரை இரட்டித்து வரும் அதற்கு மேல் வராது. • அடைமொழியாய் குறிப்புகளில் வரும் இசை குறிப்பு பண்பு பற்றி வரும். |

**சொல் வேறுபாடுகளில் அமைந்துள்ள முக்கிய விதிகள்**

**ஒரு - ஓர்**

வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருப்பின் நிலைமொழி ஓர் இன்று இருக்க வேண்டும். வருமொழியின் முதல் எழுத்து உயிர் மெய் எழுத்தாக இருப்பின் நிலைமொழி ஒரு என்று இருக்க வேண்டும்.**எ.கா**

| சான்று | சரி | தவறு |
|---|---|---|
| ஓர் + அறை | ஓரறை | ஒரு அறை |
| ஓர் +இலை | ஓரிலை | ஒரு இலை |
| ஓர் +ஊர் | ஓரூர் | ஒரு ஊர் |
| ஓர் +எண்ணம் | ஓரெண்ணம் | ஒரு எண்ணம் |
| ஓர் +உலகம் | ஒருலகம் | ஒரு உலகம் |
| ஓர் +கப்பல் | ஒரு கப்பல் | ஓர் கப்பல் |
| ஓர் +மரம் | ஒரு மரம் | ஓர் மரம் |
| ஓர் + வழக்கு | ஒரு வழக்கு | ஓர் வழக்கு |

**இரு – ஈர்**

இரு ஈர் என்பதற்கும் மேற்கண்ட விதிகள் பொருந்தும்.

| சான்று | சரி | தவறு |
|---|---|---|
| ஈர் + ஆண்டுகள் | ஈராண்டுகள் | இரு ஆண்டுகள் |
| ஈர் + ஆயிரம் | ஈராயிரம் | இரு ஆயிரம் |
| இரு + மலர்கள் | இருமலர்கள் | ஈர் மலர்கள் |

**விதிவிலக்கு**

செய்யுளில் ஓசை, தளை இவற்றின் காரணமாக வருமொழி முதலில்

உயிர்மெய்யாகஇருந்தாலும் நிலை மொழியாக ஓர் வருவதுண்டு.

**எ.கா**

- எல்லோரும் ஓர் குலம்
- எல்லோரும் இந்நாட்டு மன்னர் - பாரதியார்.

**அது - அஃது**

வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் நிலைமொழியில் அஃது என்ற சொல் வரும். வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய் எழுத்தாக இருந்தால், நிலைமொழியில் **அது** என்ற சொல் வரும்.

| சரி | தவறு |
|---|---|
| அஃது உயிர் | அது உயிர் |
| அஃது ஆலமரம் | அது ஆலமரம் |
| அது மரம் | அஃது மரம் |
| அது புத்தகம் | அஃது புத்தகம் |

**தான்– தாம்** இவ்விரண்டு சொற்களும் பெயர் சொல்லாகவும் இடை சொல்லாகவும் சொற்றொடரில் பொருள் தந்து வரும். இவை தனித்து வராது. வந்தால் பொருள் இல்லை. சொற்களோடு இணைந்து வந்தால்தான் இவற்றிற்கு பொருள் உண்டு.

**பெயர்ச்சொல் (தான்)**

**எ.கா;**

**தான்** நினைத்ததை செங்குட்டுவன் செய்து முடித்தான்.

**இடைச்சொல் (தான்)**

**எ.கா;** செங்குட்டுவன் **தான்** வட நாட்டின் மீது படையெடுத்தான்.

**பெயர் சொல் (தாம்)**

**எ.கா; தாம்** வெற்றி பெறுவது உறுதி என்று மாணவர்கள் அறிவித்தனர்.

**இடைச்சொல் (தாம்)**

**எ.கா;** ஆசிரியர்கள் **தாம்** குழந்தைகளை நன்முறையில் வளர்க்க வேண்டும்.

- தான் என்பது ஒருமை சொல்
- தாம் என்பது பன்மை சொல்.

அன்று - அல்ல

ஒருமைசொல் வரும்பொழுது அன்று என்ற சொல்லும் பன்மை சொல் வரும்பொழுது அல்ல என்ற சொல்லும் வரும்.

எடுத்துக்காட்டு ;

| | | | |
|---|---|---|---|
| இது | காடு | அன்று | அஃறிணை |
| இது | மயில் | அன்று | |
| இவை | காடுகள் | அல்ல | |
| இவை | மயில்கள் | அல்ல | |
| இவன் | சான்றோன் | அல்லன் | உயர்திணை |
| இவர்கள் | மாணவர் | அல்ல | |

முதலான

- ஒரு தொகுப்பில் உள்ளவற்றை சுட்டும் போது முதன்மையானதை மட்டும் சுட்டி அதனோடு தொடர்புடைய பிறவற்றை சுட்டாதபோது **முதலான** என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

நாம் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க திருக்குறள் முதலான அற நூல்களை கற்க வேண்டும்.

**ஆகிய**

- ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் உன்னோடு தொடர்புடைய அனைத்தையும் முழுமையாக சுட்டும் போது **ஆகிய** என்னும் சொல்லை பயன்படுத்த வேண்டும்.
- **எடுத்துக்காட்டு**

  இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழை போற்றி வளர்த்தல் வேண்டும்.

www.tnpscgroup4.in

**முதலிய**

ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அதனோடு தொடர்புடைய சிலவற்றையோ, பலவற்றையோ மட்டும் சுட்டும்போது **முதலிய** என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

நாம் பண்பாட்டில் சிறந்து விளங்க நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய எட்டுத்தொகை நூல்களை கற்க வேண்டும்.

**எத்தனை- எத்துனை**

எத்தனை எண்ணிக்கையை குறிக்கும். எத்துணை அளவையும் காலத்தையும் குறிக்கும்.

**எடுத்துக்காட்டு**

- எத்தனை நூல்கள் வேண்டும் ?
- எத்துணை பெரிய மரம்
- எத்துணை ஆண்டு பழமையானது.

**எண்ணுப் பெயர்கள் – எண்ணடைகள்**

| | | (எ.கா) |
|---|---|---|
| ஒன்று | ஒரு ஓர் , | ஒரு மரம், ஓரிலை |
| இரண்டு | இரு ஈர் , | இரு மரங்கள், ஈரிலைகள் |
| மூன்று | மூ, மு, | மூவர், முத்தமிழ் |
| நான்கு | நாள் நாலு, | நால்வர், நாலு நாள்கள் |
| ஐந்து | ஐ, | ஐவர் ,ஐம்பெரும் காப்பியம் |
| ஆறு | அரு, | அருவர் ,அறுபடை |
| ஏழு | எழு, ஏழ் | எழுவர் ,ஏழிசை |
| எட்டு | எண் | என்மர் ,எண்டிசை |
| ஒன்பது | ஒன் | ஒன்பதின்மர் |
| பத்து. | பதின் பன். | பதின்மர், பண்ணிருவர் . |

**வழாநிலை, வலு, வழுவமைதி**

**வழாநிலை**

இலக்கண முறைப்படி குற்றமில்லாத பேசுவதும் முழுவதும் வழாநிலை எனப்படும்.

வழாநிலை அறுவகைப்படும்:

1. **திணைவழாநிலை**–செல்வி பாடினாள், மாடு வந்தது
2. **பால்வழா நிலை**–கண்ணன் வந்தான், நாய் ஓடியது
3. **இடவழா நிலை**–நான் வந்தேன், நீ வருவாய்
4. **கால வழா நிலை**–நாளை வருவேன், நேற்று படித்தேன்
5. **வினாவழா நிலை**–தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?
6. **விடைவழா நிலை**–தமிழ்நாட்டின் தலைநகரம் எது?

என்ற வினாவுக்கு சென்னை என விடை அளித்தல்.

**வலு**

இலக்கண முறை இன்றி பேசுவதும் எழுதுவதும் வலு எனப்படும் வலு 7 வகைப்படும்.

1. **திணை வலு** – என் மாமா வந்தது – மாமா எனும் உயர்திணை பெயர் வந்தது எனும் அஃறிணை வினை கொண்டு முடிந்தால் இது திணை வழு ஆகும்.
2. பால் வலு – கண்ணகி வந்தான் – கண்ணகி எனும் பெண்பாற் பெயர், வந்தான் எனும் ஆண்பால் விகுதி கொண்டு முடிந்ததால் இது பால் வழு ஆகும்.
3. **இட வலு** – நாங்கள் வந்தார்கள் – நாங்கள் எனும் தன்மை இடத்து பன்மை பெயர், வந்தார்கள் எனும் படர்க்கை இடத்து பலர்பாலொடு முடிந்துள்ளதால் இஃது இட வழு ஆகும்.
4. **கால வலு** – கரிகாலன் நாளை வந்தான் – நாளை எனும் எதிர்கால பெயரோடு வந்தான் என இறந்த கால பெயர் மயங்கி வந்துள்ளதால் இது கால வழுவாகும்.
5. **வினா வலு** – முட்டையிட்டது சேவலா ? பெட்டையா ? சேவல் எனப்

www.tnpscgroup4.in

பொருத்தமில்லாத வினாவைக் கேட்டதால் இது வினா வலுவாகும்.

6. **விடை வலு** – நாளை பள்ளி திறக்கப்படுமா ?எனும் வினாவிற்கு என் அத்தைக்கு உடல் நலமில்லை எனக் கூறுவது விடை வழுவாகும்.
7. **மரபு வலு** – நாய் கத்தும் – இத்தொடரில் குரைக்கும் என்பதற்குப் பதிலாக கத்தும் என அமைந்துள்ளதால் இது மரபு வழு ஆகும்.

**வழுவமைதி**

இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும் இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்ற ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவ அமைதியாகும். **உவகை, சிறப்பு, உயர்வு, உறுதி, சினம்** ஆகிய காரணங்களினால் **திணை வழுவும், பால் வலுவும், கால வலுவும், வலு அமைதியாக** ஏற்றுக் கொள்ளப்படும்.

**திணை வழுவமைதி**

**பசுவை பார்த்து என் லட்சுமி வந்துவிட்டாள்** எனக் கூறுவது திணை வலுவாயினும் திணை வழு அமைதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**கால வழுவமைதி ;**

**குடியரசு தலைவர் நாளை தமிழகம் வருகிறார்–** இத்தொடரில் நாளை என்ற எதிர்கால சொல்லுக்கு வருவார் என்ற எதிர்கால வினை அமைய வேண்டும். ஆனால் வருகையின் உறுதித் தன்மை நோக்கி கால வழுவ அமைதியாக ஏற்றுக் கொள்கிறோம்.

**பால் வலுவமைதி**

**தந்தை தன் மகளை அன்புடன் இங்கே வாடா,** என்று அழைப்பது பெண்பாலை ஆண்பாலாக விழிப்பது பால் வலுவ அமைதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**வினா வகைகளும் விடை வகைகளும்**

**வினா வகைகள்**

வினா ஆறு வகைப்படும்

**அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை**

**ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார். –**

**நன்னூல் ; 385**

| எண் | வினா வகை | விளக்கம் | எ.கா. |
|---|---|---|---|
| 1. | அறிவினா | தனக்கு தெரிந்தது பிறருக்கு தெரியுமா, என்பதை அறிந்து கொள்ள கேட்பது அறிவினாவாகும் | ஆசிரியர் மாணவனிடம் கேட்பது அறம் என்பதன் பொருள் என்ன ? |
| 2. | அறியா வினா | தனக்குத் தெரியாததை கேட்டு தெரிந்து கொள்வது அரியா வினா ஆகும். | தொல்காப்பியத்திற்கும் நன்னூல் இலக்கணத்திற்கும் என்ன வேறுபாடு ? |
| 3. | ஐயவினா | ஐயவினா சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள கேட்பது ஐயவினா ஆகும். | அங்கு இருப்பது சிறுத்தையா புலியா ? |
| 4. | கொளல் வினா | பொருள் வாங்கும் பொருட்டு கேட்பது கொளல் வினா ஆகும். | அரிசி இருக்கின்றதா ? |
| 5. | கொடை வினா | இல்லாதவர்க்கு கொடுக்கும் பொருட்டு | செலவிற்கு பணம் உள்ளதா ? |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | | |
|---|---|---|---|
| | | கேட்பது கொடை வினா ஆகும். | |
| 6. | ஏவல் வினா | ஒரு வேலையை முடிக்கும் பொருட்டு கேட்பது ஏவல் வினா ஆகும். | வீட்டுப்பாடம் படித்து விட்டாயா ? |

**விடை வகைகள்**

**விடை எட்டு வகைப்படும்**

சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற(து) உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும்எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப –
நன்னூல்; 386

| எண் | விடை வகை | விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| 1. | சுட்டுவிடை | இது, அது என்று சுட்டிகாட்டி பதில் கூறினால் அது சுட்டு விடை எனப்படும். | கரூருக்கு வழி யாது ? என்று கேட்டால் **இது** என சுட்டிக்காட்டுவது. |
| 2. | மறைவிடை | ஒரு காரியத்தை செய்ய மறுத்து கூறுவது மறைவிட எனப்படும். | இதனை செய்வாயா ? என வினவினால் செய்யேன் என மறுப்பது. |
| 3. | நேர் விடை | ஒரு காரியத்தை செய்ய ஒத்துக் கொண்டு பதில் கூறுவது நேர் விடை எனப்படும். | இதனை செய்வாயா ? என வினவினால் செய்வேன் எனக் கூறுவது. |
| 4. | ஏவல் விடை | ஒரு காரியத்தை சொன்னவரிடமே செய்யச் சொல்வது ஏவல் விடையாகும். | இதனை செய்வாயா என வினவினால் நீயே செய் என கூறுவது. |
| 5. | வினாதல் விடை | வினாவிற்கு எதிராக வினாவின் மூலமாகவே விடை கூறுதல் வினாதல் விடையாகும். | நீ நாளை வருவாயா ? என்னும் வினாவிற்கு, வரமாட்டேனா ? என விடை கொடுத்தல் ஆகும். |
| 6. | உற்றது உரைத்தல் விடை | விடையை குறித்தால் பெற வைப்பது உற்றது உரைத்தல் எனப்படும். | நீ ஏன் வரவில்லை ? என்னும் வினாவிற்கு, தலைவலித்தது என்று விடை கூறுவது. |
| 7. | உறுவது கூறல் விடை | தனக்கு நேரடியாக ஒன்றைக் குறிப்பால் உணர்த்தி செயலை மறுக்கும் விதமாக விடை | பாரவண்டி இழுப்பாயா ? என்ற வினாவிற்கு கை வலிக்கும், என விடை கூறுதல். |

www.tnpscgroup4.in

| | | | |
|---|---|---|---|
| | | கூறுவது உறுவது கூறல் வகை விடையாகும். | |
| 8. | இனமொழி விடை | ஒரு பொருளை கேட்கும்பொழுது இல்லை என்று கூறாமல் அதற்கு பதில் வேறு பொருள் உள்ளது என கூறுவது. | துவரை உள்ளதா ? என்ற வினாவிற்கு உளுந்து உள்ளது என விடை கூறுவது. |

**ஓரெழுத்து ஒருமொழி**

பல எழுத்துக்கள் சேர்ந்து சொல் அமைவது போன்று ஓர் எழுத்தே பொருள் தந்து சொல்லாதலும் உண்டு. இங்ஙனம் பொருள் தந்து சொல்லாகின்ற எழுத்துக்கள் பல உள்ளன.அவற்றிற்கு ஓரெழுத்து ஒருமொழி என்று பெயர்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உயிர் வருக்கம் | 6 | த வருக்கம் | 5 | க வருக்கம் | 4 | குறில் எழுத்துக்கள் | 1 |
| ம வருக்கம் | 6 | ப வருக்கம் | 5 | வ வருக்கம் | 4 | நொ, து , ய வருக்கம் | 1 |
| – | – | ந வருக்கம் | 5 | ச வருக்கம் | 4 | – | – |

**சான்று : உயிர் வருக்கம் 6 ; ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ**

| | |
|---|---|
| ஆ | (பசு ) |
| ஈ | (ஈ என்னும் பறவை) |
| ஊ | (உணவு) |
| ஏ | (அம்பு) |
| ஐ | (தலைவன்) |
| ஓ | (மகிழ்ச்சி) |

**ம வருக்கம் ஆறு ; மா, மீ, மூ, மே, மை, மோ**

| | |
|---|---|
| மா | (அழகு, மேன்மை) |
| மீ | (உயர்ச்சி) |
| மூ | (மூப்பு, மூன்று) |
| மே | (அன்பு, மேம்பாடு) |
| மை | (அஞ்சனம், எழுதுமை) |
| மோ | மோத்தல் |

**த வருக்கம் ஐந்து; தா, தீ, தூ, தே, தை**

| | |
|---|---|
| தா | (அழிவு, தாண்டுதல்) |
| தீ | (நெருப்பு, இனிமை) |
| தூ | (துய்மை, பகை) |
| தே | (கடவுள், அருள்) |
| தை | (ஒரு திங்கள்) |

**ப வருக்கம் ஐந்து; பா, பூ, பே, பை, போ**

| | |
|---|---|
| பா | (பாட்டு, அழகு) |
| பூ | (மலர், புவி) |
| பே | (நுரை, மேகம்) |
| பை | (கொள்கலம், இளமை) |
| போ | (போதல்) |

**ந வருக்கம் ஐந்து; நா, நீ, நே, நை, நோ**

| | |
|---|---|
| நா | (நாக்கு, அயலார்) |
| நீ | (முன்னிலை, நீ) |
| நே | (அன்பு, அருள்) |
| நை | (இகழ்ச்சி, குறிப்பு) |
| நோ | (நோய், துன்பம்) |

**க வருக்கம் நான்கு; கா, கூ, கை, கோ**

| | |
|---|---|
| கா | (காத்தல், சோலை) |
| கூ | (நிலம்) |
| கை | (கை, ஒழுக்கம்) |
| கோ | (மன்னன், பசு) |

**வ வருக்கம் நான்கு; வா, வீ, வை, வெள**

| | |
|---|---|
| வா | (வருதல்) |
| வீ | (மலர், விரும்புதல்) |
| வை | (வைத்தல், வைக்கோல்) |
| வெள | (கைப்பற்றுதல், ஒலிக்குறிப்பு) |

**ச வருக்கம் நான்கு; சா, சீ, சே, சோ**

| | |
|---|---|
| சா | (சாதல், சோர்தல்) |
| சீ | (இகழ்ச்சிக் குறிப்பு, இலக்குமி) |
| சே | (காளைமாடு, சிவப்பு) |
| சோ | (மதில், நகர்) |

www.tnpscgroup4.in

**யா வருக்கத்தில் ஒன்று; யா**

| | |
|---|---|
| யா | (யாவை, ஒருவகை மரம்) |

**குறில் ; நொ, து**

| | |
|---|---|
| நொ | (துன்பம், நோய்) |
| து | (உண், அசைத்தல்) |

**வல்லினம் மிகும் இடங்கள் மற்றும் மிகா இடங்களில் புணர்ச்சி விதிகள்**

நிலைமொழியின் இறுதி எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் இணைதலே புணர்ச்சி எனப்படும். புணர்ச்சி இரண்டு வகைப்படும். அவை;

1. இயல்புப் புணர்ச்சி 2.விகாரப் புணர்ச்சி

**இயல்புப் புணர்ச்சி;**

நிலைமொழியும், வருமொழியும் சேரும் பொழுது எவ்வித மாற்றமுமின்றி புணர்தல் இயல்பு புணர்ச்சி எனப்படும்.

**எடுத்துக்காட்டு;** சில + மனிதர்கள் – சில மனிதர்கள், ஒளி + விளக்கு – ஒளிவிளக்கு

**விகாரப் புணர்ச்சி**

நிலைமொழியும் வருமொழியும் சேரும்பொழுது மாற்றங்கள் ஏற்பட்டு புணர்வது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

**விகாரப் புணர்ச்சி**

⇒ **தோன்றல்**

- எ.கா; பூ +கொடி =பூங்கொடி
- மெய்தோன்றல்

⇒ **திரிதல்**

- எ.கா: பொன்+சிலை=பொற்சிலை
- னகரம் றகரமாகத் திரிந்த்து

⇒ **கெடுதல்**

- எ.கா: மரம் +வேர் =மரவேர்
- ம் என்ற மெய் கெட்டது

**<u>எழுத்துக்களின் அடிப்படையில் புணர்ச்சி</u>**

சொற்புணர்ச்சியில் நிலைமொழி இறுதி எழுத்தாகவும் வருமொழி முதலெழுத்தாகவும் எழுத்துக்கள் சந்திக்கும் முறை நான்கு வகைப்படும்.

1. உயிர் + உயிர் ➡ மலை + அருவி(ஐ+அ)
2. உயிர் + உயிர் ➡ தமிழ் + அன்னை (ழ் + அ)
3. உயிர் + மெய் ➡ தென்னை + மரம் (ஐ + ம்)
4. மெய் + மெய் ➡ தேன் + மழை (ன் + ம்)

**சொற்களின் அடிப்படையில் புணர்ச்சி**

இலக்கண வகையால் சொற்கள் நான்கு வகைப்படும். இவற்றுள் இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பெயரையும், வினையும் சார்ந்தே வருகின்றன. இவ்விரு சொற்களும் நிலை மொழியாகவும், வரும் மொழியாகவும், வந்தாலும் அவற்றின் புணர்ச்சி எழுத்துக்களின் புணர்ச்சியே ஆகும்.

- பெயர் + பெயர் ➡ கனி + சாறு (பெயர்ப்பெயர் தொடர்)
- பெயர் + வினை ➡ தமிழ் + படி (பெயர் வினைத்தொடர்)
- வினை + வினை ➡ நடந்து + செல் (வினை வினை தொடர்)
- வினை + பெயர் ➡ படித்த + நூல் (வினைப் பெயர் தொடர்)

**வல்லினம் மிகும், மிகா இடங்கள்**

1. அங்கு சென்றான்
2. அங்குச் சென்றான்

- முதல் தொடரில் அங்கு சென்றான் என்பது அங்கு என்னும் பெயருடையவன் சென்றான் என்று பொருள்பட அமைந்துள்ளது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- இரண்டாம் தொடரில் அங்கு சென்றான் என்பதில் ஓர் ஒற்றை எழுத்து நிலைமொழியில் சேர்ந்தவுடன் அந்த இடத்திற்கு சென்றான் என்று பொருள் மாறி விடுகிறது.
- நிலைமொழி முதலில் நிற்கும் சொல் ; வருமொழி – அடுத்து நிற்கும் சொல்.
- நிலை மொழியும் வரும் மொழியும் ஒன்றோடு ஒன்று சேரும்பொழுது வல்லின எழுத்துக்கள்(க்,ச்,த்,ப்) ஒரு சில இடங்களில் இடையில் வந்து மிகும்.

**<u>அதற்கான விதிகள்</u>**

1. **இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும் (இரண்டாம் வேற்றுமை உருபு ஐ)**

**<u>எடுத்துக்காட்டு</u>**

- பொருளை + தேடு -பொருளைத் தேடு
- அவளைக் + கண்டேன் -அவளைக் கண்டேன்

நிலைமொழியில் இரண்டாம் வேற்றுமை உருபு (ள் + ஐ = ளை) வந்துள்ளது.

வருமொழியின் முதல் எழுத்து (த, க) வல்லினமாக வந்துள்ளது.

2. **நிலைமொழி ஈற்றில் உயிர் எழுத்து நிற்க வருமொழி முதலில் வல்லினம் வந்தால் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- நிலா + சோறு நிலா சோறு (ல் + ஆ)
- பணி + துளி பனித்துளி (இன் + இ)

3. **சுட்டு வினா இவற்றின் திரிபுகளான அந்த, இந்த, எந்த, என்ற சொற்களின் பின்னால் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- அந்த + கிணறு - அந்தக்கிணறு
- இந்தக் + தோட்டம் - இந்தத் தோட்டம்
- எந்த + செயல்– எந்த செயல்

4. **அ, இ என்னும் சுட்டெழுத்துக்களின் பின்னும் ஏ என்னும் வினா எழுத்திற்கு பின்னால் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- அ + கூடம் - அக்கூடம்
- இ + கூட - இக்கூடம்
- எ + சொல் - எச்சொல்

5. **அப்படி, இப்படி, எப்படி எனும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- அப்படி + கூறினான்–அப்படி கூறினான்
- இப்படி + கூறினான்– இப்படி கூறினான்
- எப்படி + தந்தால் -எப்படி தந்தான் ?

6. **ஆறாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- தாமரை + பூ - தாமரைப்பூ
- குதிரை +கால்– குதிரை கால்

7. **ஏழாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- குடி + புகுந்தார் – குடி புகுந்தார்
- வழி + சென்றார்– வழிச் சென்றார்

8. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

**எடுத்துக்காட்டு**

- பள்ளிக்கு + சென்றேன் – பள்ளிக்குச் சென்றேன்
- கடைக்கு + போனேன் - கடைக்கு போனேன்

9. **இரண்டுமூன்று நான்கு ஐந்தாம் வேற்றுமை உருபு பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

எடுத்துக்காட்டு

- தண்ணீர் + பாம்பு -தண்ணீர் பாம்பு
- தேர் + பாகான் –தேர் பகான்
- கறி + கடை -கறிக்கடை
- பருத்தி + துணி –பருத்தி துணி
- கண்ணாடி + கதவு –கண்ணாடி கதவு
- பூட்டு + சாவி - பூட்டு சாவி
- விழி + புனல்– விழி புனல்

**10. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்**

எடுத்துக்காட்டு

- படித்து + பார் – படித்துப் பார்
- பாக்கு + தூள் – பாக்குத்தூள்
- தச்சு + தொழில் - தச்சுத் தொழில்
- கேட்டு + செயல் – கேட்டுச் செயல்

வல்லின எழுத்துக்களின் மேல் ஏறி வரும் உகரத்திற்கு குற்றியலுகரம் என்று பெயர்.

- க் + உ = கு
- ச் + உ = சு
- ட் + உ = டு
- க் + உ = து
- ப் + உ = பு
- ற் + உ = று

வல்லின எழுத்துக்களை தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**11. மென்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் சில இடங்களில் வல்லினம் மிகும்.**

எடுத்துக்காட்டு

- மருந்து + கடை - மருந்து கடை
- பண்பு + தொகை - பண்புத்தொகை
- கன்று + குட்டி - கன்று குட்டி

ந் - மெல்லினம் – து – குற்றியலுகரம். மெல்லினத்தை அடுத்து வரும் குற்றியலுகரம் மென் தொடர் குற்றியலுகரம் ஆகும்.

**12. இரு பெயரொட்டுப் பண்பு தொகையில் வல்லினம் மிகும்.**

எடுத்துக்காட்டு

- சாரை + பாம்பு - சாரை பாம்பு
- மார்கழி + திங்கள் - மார்கழி திங்கள்

**13. அகர ஈற்று வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.**

எடுத்துக்காட்டு

- தேட + சொன்னான் –தேட சொன்னான்
- என + கூறு –என கூறு
- நன்றாக + படிப்பேன் -நன்றாக படிப்பேன்
- பேச + செய்தார் -பேச செய்தார்
- காண + கொடுத்தான்–காண கொடுத்தான்
- விளையாட + பார்த்தான் - விளையாடப் பார்த்தான்
- பாட + கேட்டேன்– பாட கேட்டேன்

**14. நிலைமொழியின் ஈற்றில் உயிர் எழுத்துக்கள் வந்தால் வல்லினம் மிகும்.**

எடுத்துக்காட்டு

- மொழி + பற்று -மொழிப்பற்று (ல் + இ = ழி)
- அறிவு + கடல் -அறிவு கடல் (வ் + உ = வு)
- பசி + பிணி–பசிப்பிணி (ச் + இ = சி)

**15. ஓரெழுத்து ஒரு மொழிக்கு பின் வல்லினம் மிகும்.**

எடுத்துக்காட்டு

- பூ + பைத்தான் - பூ பறித்தான்
- கை + காசு - கை காசு
- டீ + பிடித்தது – தீ பிடித்தது

www.tnpscgroup4.in

**16. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சத்தில் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- பாடா + பைங்கிளி – பாடாப் பைங்கிளி
- கூவா + குயில் - கூவாக்குயில்
- அடங்கா + சினம் -அடங்காச்சினம்
- உலவா + தென்றல் - உலவாத்தென்றல்

**17. அங்கு இங்கு எங்கு ஆங்கு இங்கு யாண்டு ஆகிய இட பெயர்கள் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- அங்கு + கண்டான் =அங்குக் கண்டான்
- இங்கு + சொன்னான் =இங்குச் சொன்னான்
- எங்கு + பார்த்தான் =எங்குப் பார்த்தான்
- அங்கு தேடினர் =ஆங்குத் தேடினர்
- ஈங்கு + கூடினர் = ஈங்குக் கூடினர்
- யாண்டு + சென்றது =யாண்டுச் சென்றது ?

**18. மற்று, மற்ற, மற்றை, எனும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- மற்று + சிலவற்றை –மற்றுச் சிலவற்றை
- மற்றை + குழந்தைகள் –மற்றைக் குழந்தைகள்.

**19. நிலைமொழியின் ஈற்றில் ய், ர், ழ் எனும் மெய் எழுத்துக்கள் வந்து, வருமொழி பெயர் சொல்லாக இருந்தால் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- வாய் + சொல் - வாய்ச்சொல்
- மலர் + கூந்தல் – மலர்க்கூந்தல்
- தமிழ் + தென்றல் – தமிழ்த்தென்றல்
- நீர் + குமிழி – நீர்க்குமிழி

**20. முன்னர் பின்னர் ஆகிய இடைச் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- முன்னர் + கண்டோம் – முன்னர்க்கண்டோம்
- பின்னர் + கண்டோம் - பின்னர்க்கண்டோம்

**21. ட, ற என்ற ஒற்று இரட்டிக்கும் போது வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- நாடு + பற்று – நாட்டுப்பற்று
- காடு + தேன் - காட்டுத்தேன்

**22. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- பவளம் + செவ்வாய் - பவளச்செவ்வாய்
- மலர் + கண் - மலர்க்கண்

**23. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- சால + பேசினான் - சாலப்பேசினான்
- தவ + சிறிது - தவச்சிறிது

**24. அவ்வகை, எவ்வகை, இவ்வகை எனும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

அவ்வகைப்பேச்சு

**25. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- பச்சை + பட்டு - பச்சைப்பட்டு
- பச்சை + கிளி - பச்சைக்கிளி
- வட்டம் +பலகை - வட்டப்பலகை

**26. என, இனி, தனி, ஆக முதலிய இடைச்சொற்களில் பின் வல்லினம் மிகும்.**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**எடுத்துக்காட்டு**

- என + கூறினான் - எனக்கூறினான்
- இனி +காண்போம் - இனிக்காண்போம்
- தனி +சிறப்பு - தனிச்சிறப்பு
- வருவதாக + கூறு – வருவதாகக்கூறு

**27. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- பொது + தேர்வு - பொதுத்தேர்வு
- திரு + குறல் - திருக்குறள்

**28. இ, கர ஈற்று வினையெச்சச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- நாடி + சென்றான் -நாடிச்சென்றான்
- தேடி + பழகினான் தேடிப்பழகினான்
- தேடி + திரிந்தான்- தேடித்திரிந்தான்
- செதுக்கி + கொடுத்தான் செதுக்கிக்கொடுத்தான்
- ஊன்றி + படித்தான் ஊன்றிப்படித்தான்
- தழுவி + கொண்டான் – தழுவிக்கொண்டான்
- கொட்டி + கிடக்கிறது – கொட்டிக்கிடக்கிறது

**29. அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- அதற்கு + சொன்னேன் – அதற்குச் சொன்னேன்
- இதற்குக் + கொடு - இதற்குக் கொடு
- எதற்கு + கேட்கிறாய்- எதற்குக் கேட்கிறாய்

**30. மிக என்னும் சொல்லின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- மிக + பெரியவர் – மிகப்பெரியவர்
- மிக + சிறியது - மிகச்சிறியது

**31. திசை பெயர்களின் பின் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- கிழக்கு + பகுதி – கிழக்குப்பகுதி
- வடக்கு + பகுதி - வடக்குப்பகுதி

**32. சில உருவ சொற்களில் வல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

- வாழ்க்கை + படகு – வாழ்க்கைப்படகு
- உலக + பந்து - உலகப்பந்து

**வல்லினம் மிகா இடங்கள்**

1) அது, இது, அவை, இவை, என்னும் சுட்டுக்களின் பின்னும் எது, யாது, எவை, என வினாச் சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

**எடுத்துக்காட்டு**

- அது + போயிட்டு = அது போயிட்டு
- இது + பறந்தது = பறந்தது
- எது + கண்டது = எது கண்டது ?
- யாது + சொல் = யாது சொல் ?
- அவை + பரந்தன = அவை பறந்தன
- இவை + சென்றன = இவை சென்றன
- எவை + வந்தன = எவை வந்தன ?

**2) அத்தனை, இத்தனை, எத்தனை என்ற சொற்களின் பின் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- அத்தனை + பழங்களா= அத்தனை பழங்களா ?
- இத்தனை + பூக்களா = இத்தனை பூக்களா ?


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in
www.tnpscgroup4.in

- எத்தனை + தேங்காய் = எத்தனை தேங்காய் ?

3) **வினாவை உணர்த்தும் அ, ஓ, எ, யா, எனும் வினா எழுத்துக்களின் பின் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- அவனா +கைதான் – அவனா தைத்தான் ?
- இவளோ + போனாள்- இவளோ போனாள் ?
- அவனே +செய்வான்- அவனே செய்வான் ?

4) **சில பல என்னும் சொற்களின் பின்வள் இனம் மிகாது**

**எடுத்துக்காட்டு**

- பல + குடிசைகள் = பல குடிசைகள்
- சில + சொற்கள் = சில சொற்கள்

5) **விழிப்பெயர் என்னும் வியங்கோள் வினைமுற்றின் பின்னும் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- தம்பி + போ = தம்பி போ
- வாழ்க + மாந்தர் = வாழ்க மாந்தர்

6) **எழுவாய் தொடரில் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- நாய் + போனது = நாய் போனது
- மாடு + பாய்ந்தது = மாடு பாய்ந்தது
- வள்ளி + படித்தால் = வள்ளி படித்தால்

7) **வினைத்தொகையில் வல்லினம் மிகாது.**
**எடுத்துக்காட்டு**

- சுடு + காடு = சுடுகாடு
- விரி + கதிர் = விரி கதிர்

8) **இரண்டாம் வேற்றுமை தொகையில் வல்லினம் மிகாது.**
**எடுத்துக்காட்டு**

- தமிழ் + கற்றார் = தமிழ் கற்றார்
- நீர் + குடித்தால் = நீர் குடித்தால்
- துணி + கட்டினான் = துணி கட்டினான்

9) **உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- தாய் + தந்தை = தாய் தந்தை
- இரவு + பகல் = இரவு பகல்

10) **ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சத்தை பெயரெச்சத்தை தவிர மற்ற பெயரெச்சங்கள் பின் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- படித்த + பெண் = படித்த பெண்
- நல்ல + குழந்தை = நல்ல குழந்தை
- பெரிய + பெட்டி = பெரிய பெட்டி
- செய்யாத + செயல் = செய்யாத செயல்

11) **இரட்டைகிளவியிலும் அடுக்குத்தொடரிலும் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- சல + சல = சலசல
- பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

12) **எட்டு பத்து தவிர மற்ற எங்களின் முன் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- இரண்டு + கனிகள் = இரண்டு கனிகள்
- நான்கு + பொருள் = நான்கு பொருள்

13) **மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் ஒடு ஓடு வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

www.tnpscgroup4.in

- பூவோடு + சேர்ந்த = பூவோடு சேர்ந்த
- கபிலரோடு + பரணர் = கபிலரோடு பரணர்

**14) எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- கண்ணகி + பார்த்தாள் = கண்ணகி பார்த்தாள்
- பூவிழி + தந்தாள் = பூவிழி தந்தாள்

**15. வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வல்லினம்மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்
- வாழிய + பல்லாண்டு = வாழிய பல்லாண்டு

**16. பெயரெச்ச தொடர் வினையெச்ச தொடர் ஆகியவற்றில் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- வந்த + கயல்விழி = வந்த கயல்விழி
- வந்து + தந்தான் = வந்து தந்தான்
- தைட்ட + சட்டை = தைத்த சட்டை
- செய்து + பார்த்தான் = செய்து பார்த்தான்

**17. மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- அண்ணனோடு போ
- எனது சட்டை

**18. அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்ற சொற்களின் பின் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- அன்று + சொன்னார் = அன்று சொன்னார்
- இன்று + சொன்னார் = என்று சொன்னார்
- என்று + தருவார் = என்று தருவார்
- அவராவது + தருவதாவது = அவராவது தருபதாவது
- யாரடா + சொல் = யாரடா சொல்
- ஏனடி + செல்கிறாய் = ஏனடி செல்கிறாய்
- கம்பரைப் போன்ற + கவிஞர் = கம்பரைப் போன்ற கவிஞர்

**19. நிலைமொழி உயர்த்திணையாய் அமையும் போது பெயர் தொகையில் வல்லினம் மிகாது**

**எடுத்துக்காட்டு**

- தலைவி + கூற்று = தலைவி கூற்று
- தொண்டர் + படை = தொண்டர் படை

**20. கள் என்னும் அஃறினை பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**

- கருத்து + கள் = கருத்துக்கள்
- வாழ்த்து +கள் = வாழ்த்துகள்
- பொருள் + கள் = பொருள்கள்

**21. அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட, நேற்றைய, இன்றைய, நாளைய, ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது.**

**எடுத்துக்காட்டு**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- அப்படிப்பட்ட + காட்சி = அப்படிப்பட்ட காட்சி
- நேற்றைய + சண்டை = நேற்றைய சண்டை

## மெய்ம்மயக்கம்

யகர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும். வல்லினம் மிகுதல் போலவே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக (ங, ஞ, ந, ம,) என்ற நான்கு எழுத்துக்களும் மிகும்.

**1. யகர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு ;**

| | |
|---|---|
| மெய் + மயக்கம் | மெய் மயக்கம் |
| மெய் + ஞானம் | மெய்ஞானம் |
| செய் + நன்றி | செய் நன்றி |

**2. வேற்றுநிலை மெய் மயக்கத்தில் யாரால முன்னர் மெல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு ;**

| | |
|---|---|
| வேய் + குழல் | வேய்ங்குழல் |
| கூர் + சிறை | கூர்ஞ்சிறை |
| பால் + கிணறு | பாழ்ங்கிணறு |

**3. புளி என்னும் சுவை பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமின்றி மெல்லினமும் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

| | |
|---|---|
| புளி + கறி | புளிங்கறி |
| புளி + சோறு | புளிஞ்சோறு |

**4) இறுதியில் கொண்ட மரப் பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

| | |
|---|---|
| மா + பழம் = | மாம்பழம் |
| விழா + காய் | விளாங்காய் |

**5) பூ என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.**

**எடுத்துக்காட்டு**

| | |
|---|---|
| பூ + கொடி | பூங்கொடி |
| பூ + சோலை | பூஞ்சோலை |
| பூ + தொட்டி | பூந்தொட்டி |

## பொது

எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் ஆகிய இரண்டிலும் கூறப்படாத பொதுவான செய்திகள் சொல்லப்படுவதால் இது பொது எனப்படுகிறது

### வெளிப்படை சொற்கள்

**எடுத்துக்காட்டு**

1. உலகிலேயே கலாச்சாரத்தில் இந்தியா தலைசிறந்த விளங்குகின்றது
2. கிரிக்கெட் விளையாட்டில் இந்தியா முதலிடம் பெற்றது.

முதல் தொடரில் இந்தியா என்பது நாட்டை குறிக்கிறது. இரண்டாம் தொடரில் இந்தியா என்பது இந்திய விளையாட்டு வீரர்களை குறிக்கிறது. இவ்வாறு வெளிப்படையாக தன் பொருளை உணர்த்துவது வெளிப்படையாகும்.

### குறிப்புச் சொற்கள்

ஒரு தொடரில் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் குறிப்பால் பொருளை உணர்த்தினால் அவை குறிப்புச் சொற்கள் எனப்படும்.

ஒன்றொளி பொதுச்சொல், விகாரச் சொல், தகுதி வழக்குச் சொல், ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினை குறிப்பு சொல், முதற் குறிப்பு சொல், தொகை குறிப்பு சொல் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

### ஒன்றொளி பொதுச்சொல்

**உயர்திணை**

1. வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர்
2. நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்.

முதல் தொடரில் வந்துள்ள ஐவர் பெண்பாலை குறிக்கின்றது

இரண்டாம் தொடரில் வந்துள்ள ஐவர் ஆண்பாலை குறிக்கின்றது

**அஃறிணை**

1. அந்த மாடு வயலில் உள்கின்றது
2. இந்த மாடு பால் கறக்கிறது

முதல் தொடரில் வந்துள்ள மாடு காளை மாட்டையும், இரண்டாம் தொடரில் வந்துள்ள மாடு பசுமாட்டையும் குறிக்கின்றது. இவ்வாறு ஒரு பொதுச்சொல் முன் பின் சேர்ந்து வரும் சொற்களின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது ஒன்ற மொழி பொதுச்சொல்லாகும்.

**இனங்குறித்தல்**

கதிரவன் வெற்றிலை தின்றான்

மேற்கண்ட தொடரில் வெற்றிலையோடு அதற்கு இனமான பாக்கு சுண்ணாம்பு ஆகியவற்றையும் குறிக்கிறது இவ்வாறு ஒரு சொல் தன் பொருளையும் தனக்கு இனமான பொருளையையும் குறித்து வருவது இனங்குறித்தல் எனப்படும்.

www.tnpscgroup4.in